# L. G. பெருங்காயம்.

ஒவ்வொரு வீட்டிற்கு மின்றியமையாதது.

மனிதர்களுக்கு ஆரோக்யத்தை அளிப்பது




L. G.

பெருங்காயம்

எங்கும் கிடைக்கும்.

ப்ரபல பெருங்காய
வியாபாரிகள்:

பம்பாய், சென்னை,
கும்பகோணம்.

லால்ஜீ கோதூ & கம்பெனி,

8, பெருமாள் முதலி தெரு, ஜி. டி., மதறாஸ்.



## புதிய புத்தக வெளியீடு

ஸ்ரீ காஞ்சி ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய ஸதாசார்ய ஸம்ரக்ஷா என்கிற க்ரந்தம் அச்சாகி வெளி வந்துவிட்டது. 10 பாரம் கொண்ட இதன் விலை 0-6-0. த்வயார்த்த விவரணத்தில் உபயஸம்ப்ரதாய ஆசார்யர்களும் ஏக கண்டர் என்பதை விரிவாக நிரூபிக்கும் இந்த க்ரந்தம் ஸ்ரீ வைஷ்ணவ சிகாமணிகள் யாவரும் கடாக்ஷிக்க உரியது.

திருவாய்மொழி திவ்யார்த்த தீபிகை மேற்படி அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின் விரிவுரையுடன் ப்ரதிமாதம் வெளி வருகின்ற இந்த ஸஞ்சிகையில் இரண்டாம்பத்து முற்றுப் பெற்றது. 200 பாசுரங்களின் உரை ஒரே வால்யமாக பயிண்டு செய்தது. விலை 4-8-0.

ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தி ஆபீஸ்,

24, சந்திரப்பமுதலி வீதி, ஜி. டி., மதறாஸ்.

# ராம் மோஹன் கம்பெனி

## வட இந்தியா யாத்திரா ஸ்பெஷல்

29-7-36-ல் சென்னையை விட்டு புறப்பட்டு
23-9-36-ல் சென்னைக்கு திரும்பிவரும்.

**மூன்றாவது வகுப்பு ரூ. 110.**

அடியிற்கண்ட க்ஷேத்திரங்களுக்கும், புண்ணிய நதி தீரங்களுக்கும், முக்கிய நகரங்களுக்கும் செல்லும்.

துங்கபத்ரா, பண்டரீபுரம், நாஸிக் (திரியம்பகம் பஞ்சவடி) பம்பாய், பரோச் (நர்மதா) பரோடா, தாகோர், (ஸ்ரீ கிருஷ்ண துலாபாரம்) ஜாம்நகர், துவாரகை, ஸித்தபூர் (மாதுர்கயா) அபுரோட் (அபுமலை) ஆஜ்மீர் (புஷ்கரம்) ஜயபூர், ஆக்ரா, மதுரா, (கோகுலம்) கோவர்த்தனம், (பிருந்தாவனம்) புதிய டில்லி, குருக்ஷேத்திரம், ஹரித்வார் (ரிஷிகேஸ்) நைமிசாரண்யம், அயோத்யா, பிரயாகை, திருவேணி, (அலஹாபாத்) சித்ரகூட பர்வதம், விந்தியாசல பர்வதம், ஸ்ரீகாசி, கயா, கல்கத்தா, பூரி-ஜகந்நாதம், சிம்ஹாசலம், ராஜமஹேந்த்ரம் முதலிய இடங்களைச் சுற்றிக்கொண்டு, சென்னைக்கு திரும்பிவரும்.

பிரயாணகாலத்தில், யாத்ரீகர்களுக்கு எல்லாவித சௌகர்யங்களும் செய்து கொடுக்கப்படும். இதுவரையில் எங்கள் ஸ்பெஷலில் ஆறாயிரம் பேர்களுக்கு மேல் திருப்தியுடன் யாத்திரை செய்திருக்கிறார்கள்.

முழு விவரங்களுக்கு எழுதவும்.

**ராம் மோஹன் கம்பெனி,**
பிரயாணிகளின் ரயில்வே ஏஜண்டுகள்,
**25, தம்பு செட்டி தெரு, சென்னை.**



ஸ்ரீ

# ராமாநுஜ ஸித்தாந்த வைஜயந்தீ

மாதந்தோறும் வெளிவரும் ஸத்ஸம்ப்ரதாயார்த்த ப்ரகாஶக பத்ரிகை.

| தொகுதி 1. | பத்ராதிபர்<br>வடகரை இராமாநுஜாசாரியார் | பகுதி 8. |
|---|---|---|


ஶ்ரீரஸ்து
ஶ்ரிய:காந்தாய நம:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே |
ய: ஶ்ருதிஸ்ம்ருதிஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ||
வேதவேதாந்த வேதாம்ப: ஸ்ரோத: ப்ரஸ்ரவவர்ஷிணீ |
ஶ்ரீராமாநுஜஸித்தாந்த வைஜயந்தீ விஜ்ரும்பதாம் ||

## ஆனிதன்னிற் சோதிநன்னாள்.

[பெருமாள் கோவில் ப்ரதிவாதி பயங்கரம்
ஸ்ரீ. உ. வே. அண்ணங்கராசாரியார்]

இன்று மாநிலத்தில் முன் நம் பெரியாழ்வார் வந்துதித்த ஆனி தன்னிற் சோதி யென்னும் நன்னாள். நன்றிபுனை பல்லாண்டு பாடிய நம் பட்டர்பிரான் வந்துதித்த நல்லானியிற் சோதிநாளென்று பெரியார் பெருமை பாராட்டும் நாள் இது. இந்நாளுக்குப் பெருமை பயந்த பெரியாழ்வாருடைய பெருமையை இன்று சிறிது அநுபவிப் போம்.

பெரிய ஆழ்வாரென்று இவரை எது கொண்டு கூறினர்? மற்ற ஆழ்வார்களிற் காட்டில் இவர் வயதிற் பெரியரல்லர்; பெரிய பெரிய பிரபந்தங்களை இயற்றினருமல்லர். உண்மையில், இவரினும் வயதிற் பெரியராயும் ஆயிரக்கணக்கான பாடல்களையுடைய பெரிய பிரபந்தங்களைப் பணித்தவராயுமுள்ள ப்ரபந்நஜந கூடஸ்தரான நம்மாழ்வாரைப் பெரியாழ்வாரென்னது, விட்டுசித்தரைப் பெரியாழ்வா

ரென்றது என்னே! என்னில்? இதற்கு இரண்டு ஆசார்ய சிகாமணிகள் இரண்டு வகையான காரணங்களை வெளியிட்டருளினர்.

ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் சூடிக்கொடுத்த நாச்சியார் விஷயமாக அருளிச்செய்த கோதாஸ்துதியில்—“𑌤𑌾𑌤𑌸𑍍𑌤𑍁𑌤𑍇 𑌮𑌧𑍁𑌭𑌿𑌦𑌃 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌲𑍇𑌶𑌵𑌶𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑌰𑍍𑌣𑌾𑌮𑍃𑌤𑍈𑌃 𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌶𑌤𑍈𑌰𑌨𑌵𑌾𑌪𑍍𑌤𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍍 । 𑌤𑍍𑌵𑌦𑍍𑌭𑍁𑌕𑍍𑌤𑌮𑌾𑌲𑍍𑌯𑌸𑍁𑌭𑌗𑌾𑌮𑍁𑌪𑌹𑍃𑌤𑍍𑌯 𑌮𑌾𑌲𑌾𑌂 𑌲𑍇𑌭𑍇 𑌮𑌹𑌤𑍍𑌤𑌰𑌪𑌦𑌾𑌨𑍁𑌗𑍁𑌣𑌂 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌮𑍍 ॥ [தாதஸ்துதே மதுபித: ஸ்துதி லேஶவஶ்யாத் கர்ணாம்ருதை: ஸ்துதிஶதை: அநவாப்த பூர்வம். த்வத்புக்தமால்ய ஸுபகா முபஹ்ருத்ய மாலாம் லேபே மஹத்தர பதாநுகுணம் ப்ரஸாதம்.] என்றுள்ள ச்லோகத்தை நோக்குமிடத்து, ஆண்டாள் சூடிக்களைந்த பூமாலையைப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்ததனாலேயே விட்டுசித்தர், பெரியாழ்வார் என்கிற பட்டப் பெயரைப் பெற்றருளினர் என்று தேசிகன் திருவுள்ளம் பற்றுவதாகப் புலப்படுகின்றது. ஆழ்வார்க்கு விசேஷணமான பெரிய என்னும் பதத்தையே மஹத்தரபதமென்று தேசிகன் குறிப்பிடுகிருரென்பது ஸம்ப்ரதாயம். ஆனால் அவ்விடத்திற்கு உரை யெழுதியுள்ள சில மஹான்கள் மஹத்தரபத மென்றதற்கு மிகச் சிறந்த ஸ்தானமாகிய நித்யவிபூதி யென்று பொருள் கொண்டார்கள். அங்கு தேசிகனுடைய ஹ்ருதயத்தை ஸம்பிரதாயம் வல்ல பெரியோர்கள் தெரியக்கண்டு கொள்வது.

இனி, மற்றொரு ஆசார்ய சிகாமணியின் நிர்வாஹத்தை நிரூபிப்போம்.

“மங்களா சாசனத்தில் மற்றுள்ள வாழ்வார்கள்
தங்கள் ஆர்வத்தளவுதானன்றிப்—பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான்
பெரியாழ்வா ரென்னும் பெயர்.”

என்பது உபதேச ரத்தினமாலையில் மணவாள மாமுனிகளின் பாசுரம். மற்றுள்ள ஆழ்வார்களுக்கும் மங்களா சாஸனத்தில் ஊற்றமிருந்தாலும் அவர்களுக்கு அது எப்போதோ ஒருகாலுள்ளதேயன்றி இப் பெரியாழ்வார்க்குப் போலே நித்யமாயும் முக்கியமாயுமிராது. அவர்கள் எம்பெருமானை ரக்ஷகனாகப்பற்றி அவனிடத்தில் த[illegible]யு விழ்ச்சியைப் பெறுவதற்கு விரும்புவர்கள். இவ்வாழ்வார் [illegible] எம்பெருமானுடைய வாழ்வையே தமக்கு

199883



வாழ்வாக நினைத்துப் பெருமாளுக்கு என்ன தீங்கு வருகிறதோவென்று பயப்பட்டுக் காப்பிடத் தேடுகிற பரமபக்தராவர். ஆனது பற்றியே மற்றுள்ள ஆழ்வார்களைவிட மிக்க பெருமையை யுடையவரானது காரணமாகவே இவர்க்குப் பெரியாழ்வா ரென்று ப்ரஸித்தியுண்டாயிற்று என்பது இப்பாசுரத்தின் கருத்து. இரண்டு வகையான நிர்வாஹங்களும் அழகியவே.

இனி, இவ்வாழ்வார்க்கு ப்ரதாந நிரூபகமான மங்களா சாஸநத்தைப்பற்றிச் சிறிது பேசுவோம். அவாப்த ஸமஸ்தகாமனென்றும் ஸர்வ ரக்ஷகனென்றும் ப்ரஸித்தனான ஈச்வரனைக் கண்டால் தமக்கு வேண்டிய மங்களங்களை அவனிடத்துப் பிரார்த்தித்துப் பெற வேண்டி யிருக்க, தாம் அவனுக்கு மங்கள முண்டாகுமாறு ஆசாஸிப்பது தகுதியோ வென்னில்; பகவத் கிருபையினால் கிடைத்த பக்தியினால் அந்த பகவானுடைய ஸர்வ ரக்ஷகத்வம் முதலான திருக்குணங்களை அடியோடு மறந்து ‘இப்பகவான் குறையொன்றுமில்லாம லிருப்பதே நமக்கு மங்களம்’ என நினைத்து மங்களா சாஸநத்தில் ஒருப்படுகின்றாராதலால், இதுபக்தி நிலைமைக்குப் பாங்காகவே அமையும்.

ஜ்ஞான தசை யென்றும் ப்ரேம தசையென்றும் இரண்டு நிலைமைகள் உண்டு. அவற்றுள், ஸர்வேச்வரனே ரக்ஷகனாகவும், தான் அவனாலே ரக்ஷிக்கப்படுகிறவனாகவும் பிரணவம் முதலியவற்றில் சொல்லுகிறபடியே தெளிவாகக் கண்டு அநுஸந்திக்கும் நிலைமை ஜ்ஞானதசையாகும். அப்போது “அண்ணா அடியேனிடரைக் களையாயே” “நெடியாய் அடியேனிடர் நீக்கே” “அடியேன் வினையாயின பாற்றே” என்றாற்போன்ற பாசுரங்கள் திருவாக்கில் வெளிவரும்.

இனி, ஸர்வேச்வரனுடைய ஜ்ஞான சக்திகளையெல்லாம் மறந்து அவனது ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களையே அநுஸந்தித்து ‘இப்படிப்பட்ட அழகிய திருமேனிக்கு என்ன தீங்கு விளைந்திடுமோ?’ என்று அச்சம் சங்கித்து வியாகுலப்படும் நிலைமை ப்ரேம தசையாகும். அப்போது ஈச்வரனை ரக்ஷிக்க வழி தேடித் தடுமாறுவர்கள்; பல்லாண்டு, போற்றி என்று காப்பிடத் தொடங்குவர்கள்.

மங்களாசாஸனம் பண்ணுகிறவர்கள் ஸர்வ ரக்ஷகனான ஈச்வரனை ரக்ஷ்யனாகவும், அவனாலே ரக்ஷிக்கப்பட வேண்டிய தங்களை

ரக்ஷகர்களாகவும் நினைக்க நேரிடுகிறபடியால் இந்த நினைவு விபரீத வுணர்ச்சியேயன்றோ? மயர்வற மதிநலம் பெற்றவர்களான ஆழ்வார்களுக்கு இத்தகைய விபரீதஞானம் கூடாதேயென்று சிலர் சங்கிப்பர்கள். தீவினையின் பயனாக வருகிற விபரீத ஞானம் ஹேயமேயொழிய எம்பெருமானது வைலக்ஷண்யமடியாக வருகிற விபரீத ஞானம் ஹேயமல்ல; மிக உத்தேச்யமாகவு மிருக்குமென்று நம் முதலிகள் ஸமாதான மருளுகின்றனர்.

அயர்வறு மமரர்களென்று போற்றப்பட்ட நித்யஸூரிகளுக்கும் இந்த விபரீத ஞானமுண்டு. 'ஹாவு ஹாவு ஹாவு' என்கிற ஸாமகான கோஷத்தைக் கேட்கும் திருவனந்தாழ்வான் அந்த ஸாம கோஷத்தை அஸுர ராக்ஷஸர்களின் கோலாஹலமென்று மயங்கிச் சீறி அழலை யுமிழ்கின்றானென்று திருமழிசைப்பிரான் தமது உட்கண்ணினால் கண்டு பேசுகின்றார்:—"ஆங்காரவாரமது கேட்டு அழலுமிழும் பூங்காரரவு" என்பது அவ்வாழ்வாருடைய பாசுரம்.

பட்டரும் ஸ்ரீ குணரத்ந கோசத்தில் "ஸ்நேஹாத் அஸ்தாந ரக்ஷா வ்யஸநிபிருஹயம் ஸாஜ்ஞ்யவக்த்ராவஸிதைஃ ஆநந்தைகார்ணவம் ஸ்ரீ ஹரிமவதி யதவயோராஹராஸ்தாநதீ—ஸ்நேஹாத் அஸ்தாந ரக்ஷாவ்ய ஸநிபிரபயம் சார்ங்க சக்ராஸி முக்யை: ஆநந்தை கார்ணவம் ஸ்ரீ:! பகவதி யுவயோராஹூ ராஸ்தாந ரத்நம்" என்கிறார். பரமபதத்தில் பஞ்சாயுதாழ்வார்களும் ப்ரேமத்தாலே கலங்கிக் காப்பிடா நிற்பர்களென்கிறது இதில்.

இவ்விபூதியிலும் ப்ரேம பரவசர்கள் பலர்க்கும் மங்களா சாஸநமே யாத்திரையாயிருக்கும்: இதற்குச் சான்றாக இதிஹாஸ புராணாதிகளிலிருந்து சில செய்திகளை யெடுத்துக் காட்டுவோம். பரிபூர்ண சக்தியுக்தன் என்கிற உணர்ச்சியும் நம்பிக்கையு மிருக்கும் போதும் ப்ரேமத்தினால் கலங்கி அஞ்சுவது உண்டு என்பதனை மூதலிக்கச் சில புராண புருஷர்களைக் காட்டுவர்கள் நம் ஆசாரியர்கள்.

இராமபிரான் பிராட்டியைத் திருமணம் புரிந்துகொண்டு மிதிலா புரியில் நின்றும் அயோத்திக்கு மீண்டுவரும்போது பரசுராமன் என் வில் வலிகண்டு போவென் றெதிர்வந்த காலத்தில் தசரத சக்ரவர்த்தி அப்பிரானுடைய பிரபல சக்தி விசேஷங்களை முற்றும் மறந்து இளமையையும் ஸௌகுமார்யத்தையுமே பார்த்து அஞ்சிப்



பரசுராமனிடத்திலே அபயம் பிரார்த்தித்தான். "அஹம் வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம்" என்று உறுதியாகக் கூறின விச்வாமித்ர முனிவனது உக்தியைக் கேட்டிருந்தும், தாடகா தாடகேய நிரஸநம், அஹல்யா சாப விமோசனம், சிவதநுர்ப்பங்கம் முதலிய அரும்பெருஞ் செயல்கள் செய்தமையைக் கேட்டிருந்தும் தயரதன் கலங்கினானென்றால் இது ப்ரேமத்தின் கனத்தினாலல்லது வேறொன்றாலன்றே.

கௌஸல்யையும் ஸ்ரீராமசந்திரனுடைய பிரபாவங்களை அறிந்திருந்தும் அவன் வநவாஸத்திற்குப் புறப்படும்போது "தத் தே பவது மங்களம்" என்று பலகாலுஞ் சொல்லி ஆசாஸித்தாள்.

ஸீதாபிராட்டியும் ஸ்ரீராமபிரானுடைய வைபவமெல்லாம் அறியுமவளாயிருக்கச் செய்தேயும் திருவபிஷேகம் பண்ணுகைக்காக ஸர்வாலங்காரங்களும் செய்துகொண்டு அவர், சக்ரவர்த்தி திருமாளிகைக்கு எழுந்தருளுகிறபோது அவரது அழகிலே தோற்று இதற்கு என் வருகிறதோவென்று ப்ரேமத்தாலே கலங்கி "ப்ரதிஸம்ஸ்ப்ருஷ்டா ஸீதா ஸத்ருசாரதவீக்ஷணா | ஆபத்யாநிபவத்ராஜ ஸம்ஹ்ருஷ்டாந்தர்ஹ்ருதயாந்ஷீ ॥ நிஸம்மாநிதா ஸீதா பர்த்தார மஸிதேக்ஷணா, ஆத்வாரமநு வவ்ராஜ மங்களாந்ய பிதத்யுஷீ." என்று திருவாசலளவும் தான் மங்களா சாஸநம் பண்ணிக்கொண்டு பின்சென்று "பூர்வாம் திஸம் வஜ்ரதர:" என்று தொடங்கி யமன் வருணன் முதலிய திக் பாலகர்களையும் இவர்க்கு ரக்ஷகராக வபேக்ஷித்தாள்.

அயோத்யா வாஸிகளான ஸகல ஜனங்களும் காலையும் மாலையும் இராமபிரானுடைய மங்களங்களை ஆசாஸித்து எல்லாத் தெய்வங்களையும் வழிபடும்படியை "ஸ்த்ரியோ வ்ருத்தாஸ் தருண்யஸ்ச ஸாயம் ப்ராதஸ் ஸமாஹிதா: ॥ ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யசஸ்விந:— ஸ்திரியோ வ்ருத்தாஸ் தருண்யஸ் ச ஸாயம் ப்ராதஸ் ஸமாஹிதா: ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யசஸ்விந:" என்ற ச்லோகத்தினால் தெரிவித்தார் வான்மீகி மாமுனிவர்.

குலசேகரப்பெருமாள் இராமபிரானுடைய சக்தி விசேஷங்களையும் நன்கறிந்தவர்; பரதாழ்வானுடைய பக்தியின் கனத்தையும் நன்கறிந்தவர்; அப்படியிருந்தும், நல்ல ப்ரதிபத்தியோடே வந்து கொண்டிருந்த அப்பரதாழ்வானை நோக்கி விபரீதமாகச் சங்கித்து,

" அஞ்சன வண்ணனென் னுருயிர்நாயக னாளாமே
வஞ்சனையாலர செய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சர மென்பன தீயுமிழ்கின்றன செல்லாவோ
உஞ்சிவர் போய்விடின் நாய்க் குகனென்றெனையோசாரோ?
ஆழ நெடுந்திரையாறு கடந்திவர் போவாரோ?
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ?
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்றோ
ஏழைமை வேடனிறந்தில னென்றெனை யேசாரோ?" (கம்பர்.)

என்கிறபடியே அதி ப்ரவ்ருத்திகள் செய்யப் பார்த்ததும், இவ்வண்ணமாகவே பரத்வாஜ மாமுனிவரும் " ந மே ஶுத்⁴யதி மே மந: ராமஸ்யாக்லிஷ்ட கர்மண:—கச்சிந் ந துஷ்டோ வ்ரஜஸி ராமஸ்யாக்லிஷ்ட. கர்மண:?" [பரதா! உன்னைப் பார்த்தால் எனக்கு மிகவும் அதிசங்கை யுண்டாகிறதே; இராமனுக்கு ஏதோ தீங்கிழைக்கப் போகிறாய் போலே தோன்ற நின்றாயே; அப்படியில்லையா? என்று கேட்டது மெல்லாம் ப்ரேமத்தின் கனத்தாலே யல்லவோ?

தண்ட காரண்ய வாஸிகளான மஹர்ஷிகளும், தங்களுடைய ஆபத்தைப் போக்கவும் அபிமதங்களைக் கொடுக்கவும் ஸ்ரீராமபிரான் எழுந்தருளி யிருக்கிறாரென்று அறிந்து வைத்தும் அதை மறந்து அவருடைய வடிவழகி லீடுபாட்டாலே மங்களா சாஸநம் பண்ணினார்களென்பது " தே தம் ஸோமமிவோத்³யந்தம் த்³ருஷ்ட்வா வை த⁴ர்மசாரிண: | மங்க³ளாநி ப்ரயுஞ்ஜாநா: ப்ரத்யக்³ருஹ்ணந் த்³ருட⁴வ்ரதா: தே தம் ஸோமமிவோத்யந்தம் த்ருஷ்ட்வா வை தர்ம சாரிண: மங்களாநி ப்ரயுஞ்ஜாநா: ப்ரத்ய க்ருஹ்ணந் த்ருட வ்ரதா:" என்கிற ச்லோகத்தினால் ஸ்ரீராமாயண ப்ரஸித்தம்.

ஸ்ரீ ஜடாயு மஹாராஜர் பிராட்டிக்காக இராவணனோடே பொருது குற்றுயிராய்க் கிடக்கிற தம்மைப் பெருமாள் வந்து கண்டவளவிலே ஜநஸ்தானத்திலிருந்த பதினாலாயிரம் இராக்கதப் படைகளையும் தனி வீரம் செய்து நின்று கொன்ற தோள்வலியை அறிந்திருக்கச் செய்தேயும், இனிமேல் என்னாய் விளையப் புகுகிறதோ! என்றஞ்சி ஆயுஷ்மந் என்று கூறும் முகத்தாலே மங்களா சாஸநம் பண்ணினார். [யாம் ஓஷதிமிவ ஆயுஷ்மந்! அந்வேஷஸி மஹாவநே, ஸா தேவீ மம ச ப்ராணா: ராவணேந உபயம் ஹ்ருதம்] என்றது காண்க.



ஸுக்ரீவமஹாராஜர் வாலிவதம் முதலியவற்றால் பெருமானுடைய் நிகரற்ற சக்தியைக் கண்டிருக்கச் செய்தேயும் ஸௌகுமார்யத்தையே பார்த்துக் கலங்கி, ஸ்ரீ விபீஷணாழ்வான் நாலு பேரும் தானுமாய் வந்தமைகண்டு, நமக்கெல்லாம் ஒருயிரான பெருமாளை நலிந்து நம்மை யெல்லாம் முடிப்பதாக வருகிறானிவன் என்று அறுதியிட்டு முதலிகளுக்குக்காட்டி இவனைச் சித்திரவதம் பண்ணவேணுமென்றதும் இவனை யங்கீகரிக்கவே கூடாதென்று பெருமானைக் கால் கட்டினதும் ப்ரேமத்தின் பாரவச்யத்தாலேயன்றோ?

கிருஷ்ணாவதாரத்திலும் விதுரர் கண்ணபிரானுடைய ஸர்வஜ்ஞத்வம் ஸர்வசக்தியுக்தத்வம் முதலியவற்றை அறிந்திருந்தும், துர்யோதந கோஷ்டியில் கண்ணன் எழுந்தருளினபோது பொய்யாஸநமிட்டுச் சிறிது அநர்த்தம் விளைவித்த படியைக் கண்டு அஞ்சி ப்ரேமாந்தராகித் தம்முடைய திருமாளிகையில் தாமிட்ட ஆஸனத்தையும் அதிசங்கை பண்ணித் தம் கையாலே அமுக்கிப் பார்த்தாரென்பது " ஸம்ஸ்ப்ருஶந்நாஸநம் ஶௌரே: விது³ரஸ் ஸ மஹாமதி: ஸம்ஸ்ப்ருசந் ஆஸநம் சௌரே: விதுரஸ் ஸ மஹாமதி:" என்ற ச்லோகத்தினால் சொல்லப்பட்டது.

எம்பெருமானாரால் திருத்திப் பணி கொள்ளப்பெற்ற பிள்ளை யுறங்கா வில்லிதாஸர், நம்பெருமாள் புறப்பாட்டில் என்ன அவத்யம் விளைகின்றதோவென்று அதிசங்கைபண்ணி பிச்சுவாய் என்கிற கத்தியை உருவிப் பிடித்துக்கொண்டு கூடவே உலாவுவர் என்பது ப்ரஸித்தம். இங்ஙனே மற்றுமுள்ள இதிஹாஸங்கள் பலபல. இவர்களெல்லாரையும் அதிசயித்த பெருமேன்மை பொருந்தியவர் இப்பெரியாழ்வார். இவருடைய திருவாக்குக்களுள் திருப்பல்லாண்டுக்கு அமைந்த ஒப்புயர்வற்ற சிறப்பை

"கோதிலவாமாழ்வார்கள் கூறுகலைக் கெல்லாம் ஆதி திருப் பல்லாண்டானதுவும்—வேதத்துக்கு ஓ மென்னுமது போல் உள்ளதுக்கெல்லாம் சுருக்காய்த்தான் மங்கலமாதலால்."

என்ற உபதேச ரத்தினமாலை கொண்டு அறிக.

மற்றுள்ள ஆழ்வார்களிற் காட்டிலும் இவ்வாழ்வார்க்கு விலக்ஷணமான ஒரு அதிசயமு முண்டு: வியாஸர் வால்மீகி முதலிய முனிவர்களின் அகக்கண்ணுக்கும் புலனாகாத பகவத் சரித்திரங்களும் இவர்க்குப் புலனாயிருக்கின்றன வென்பர். பெரியாழ்வார் திரு

மொழியில் (5-4-6.) "உன்னுடைய விக்கிரமம் ஒன்றொழியாமலெல்லாம், என்னுடைய நெஞ்சகம்பால் சுவர்வழி யெழுதிக்கொண்டேன்" என்ற விடத்து வியாக்கியான மருளாநின்ற பெரிய வாச்சான் பிள்ளை—"எல்லாம் என்னாநிற்க ஒன்றொழியாமல் என்றது வ்யாஸ வால்மீகிகளுக்கு ப்ராகாசியாதவையும் இவர் தமக்கு ப்ரகாசிக்கையாலே. 'சீமாலிகன்' 'மல்லிகை மாமாலை' இத்யாதி," என்றருளிச் செய்துள்ளார்.

மஹர்ஷிகளும் மற்றுள்ள ஆழ்வார்களும் அநுஸந்திக்கப் பெறாத இரண்டு பகவச் சரித்திரங்கள் இவ்வாழ்வார் தம்மால் அநுஸந்திக்கப்பட்டிருக்கும்படியைச் சிறிது விவரிப்போம். பெரியாழ்வார் திருமொழி (2-7-8.) "சீமாலிகனவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய், சாமாறவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலை கொண்டாய்," என்பது ஒரு (அபூர்வ) க்ருஷ்ணாவதார சரித்திரம். அதாவது—மாலிகன் என்பானொருவன் கண்ணபிரானுக்கு உயிர்த் தோழனாய் அவனிடத்திற் பலவகை ஆயுதப் பயிற்சிகளையும் பெற்று ஒருவர்க்கும் அஞ்சாமல் அஹங்காரியாய் ஸாது ஜனங்களை ஹிம்ஸித்துக் கொண்டிருக்க, நண்பனாகிய இவனை நாம் கொல்வது தகாதே! என்ன செய்யலாம்' என்று வியாகுலப்பட்டு, ஒரு நாள் அவனை நோக்கி 'நீ இப்படிச் செய்வது தகாது' என்ன, ஆஸுரப்ரக்ருதியான அந்த மாலிகன் தன் வாயில் வந்தபடி பிதற்றி 'நீ எல்லா ஆயுதங்களையும் எனக்குக் கற்பித்தும் சக்ராயுதப் பயிற்சி மாத்திரம் செய்விக்கவில்லையே' என்று குறை கூற, 'இதில் பழகுவது உனக்கு முடியாது; இது எனக்கே அஸாதாரணமானது' என்ன; 'என்னால் முடியாததும் ஒன்றுண்டோ? நீ அவசியம் அதைக் கற்பிக்கவேணும்' என்று அவன் நிர்ப்பந்திக்க, கண்ணன் 'இதுதான் தக்க ஸமயம்' என்று திருவுள்ளத்திற் கொண்டு சக்கராயுதத்தை யெடுத்துத் தன் ஒற்றை விரலால் சுழற்றி மேலெறிந்து கையில் ஏற்க, 'இது எனக்கு அரிதோ?' என்று மாலிகன் சொல்ல, 'இது உனக்கு அரிதே' என்று கண்ணன் சொல்லவும் அதை அவன் கேளாமல் அச் சக்ராயுதத்தை வாங்கிச் சுழற்றியெறிந்து பிடிப்பதாக நினைத்துத் தன் கை விரலைக் கழுத்துக்கு அடுத்து வைத்து நிற்க, அச் சக்காம் சுழன்று வருவதற்கு இடம் போதாமையாலே அதன் வீச்சு இவன் கையிற் பிடிபடாமல் இவன் தலையை அரிந்து விட்டது என்பதாம்.



ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனார் அயோத்தியி லிருந்த காலத்தில் பிராட்டியும் தாமுமாக இராக் காலங்களில் ஏகாந்தமான விடத்தில் உல்லாஸமாக இருக்கையில் பிரணய மிகுதியினால் பிராட்டி பெருமானை மல்லிகை மாலையைக்கொண்டு ஒரு முஹூர்த்த காலம் கட்டிப் போட்டுவைத்திருந்தா ளென்பது (3-10-2.) "எல்லியம் போதினிதிருத்த லிருந்ததோரிடவகையில், மல்லிகை மாமாலை கொண்டு அங்கு ஆர்த்ததுமோ ரடையாளம்" என்ற பாசுரத்தினால் வெளியிடப்பட்ட அபூர்வமானவொரு இதிஹாஸம்.

ஆகவிப்படி வ்யாஸ வால்மீகிகளிற் காட்டிலும் மற்றுள்ள ஆழ்வார்களிற் காட்டிலும் சிறப்புற்றோங்கி விளங்கின இவ்வாழ்வார்க்கு நாம் என் செய்ய வல்லோம்? இவர் கற்பித்த மங்களா சாஸனத்தையே இவர் திறத்து நாமும் விநியோகித்து வாழ்வோமாக.

---

## ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்தம்.

[பத்ராதிபர்]

[ஏரார் வைகாசி விசாகத்தின் 184-வது பக்கத்தின் தொடர்ச்சி]

பரனாவான், ஈஸ்வரன். அவன் ஜகத்காரண பூதனாய் ஸர்வ ரக்ஷகனாய் ஸ்ரிய: பதியாய் ஸமஸ்தகல்யாண குணாத்மகனாயிருப்பான் என்று சொல்லப்பட்டது.

இப்பேர்ப்பட்ட ஸர்வேஶ்வரன் ஸ்ருஷ்டி ஸதிதி ஸம்ஹாரங்களையும் பண்ணக்கடவனாயிருப்பன்.

அதெங்ஙனே யெனில்!, சதுர்முக ப்ரஹ்மாதிகளுக் கந்தர்யாமியாய் நின்று ஸ்ருஷ்டியைப் பண்ணாநிற்பன். அவ்வாறு ஸ்ருஷ்டிக்கப்பட்ட ஆத்மாக்களைத் தானே விஷ்ணு ரூபமாய் நின்று பரிபாலியா நிற்பன். ருத்ராதிகளுக் கந்தர்யாமியாய் நின்று ஸம்ஹாரத்தைப் பண்ணா நிற்பன்.

இவ்வாறு தன்னால் படைத்துப் பரிபாலிக்கப்படா நின்ற சேதனர்களைத் தானே ருத்ராதிகளுக் கந்தர்யாமியாய் நின்று ஸம்ஹாரத்தையும் செய்கிறான் என்பது, ஸர்வ ரக்ஷகனாய் தயா, வாத்ஸல்யாதி கல்யாண குணங்களையுடையவனாயிருக்கும் ஸர்வேஶ்வர

னுடைய ஸ்வபாவத்திற்கு ஸர்வவிதத்தாலும் பொருத்தமுடையதன்று, என்று சங்கிக்கக்கூடும். அது சரியன்று.

ஸம்ஹரித்தலாவது, தேஹவியோகத்தைப் பண்ணுதல். அதாவது தன்னை வணங்கி உஜ்ஜீவிக்கக் கொடுத்த கரசரணாதி (கைகால் முதலான) அவயவங்களைக்கொண்டு அபதே (கெட்ட மார்க்கத்தில்) செல்லா நின்ற சேதனர்களை அவ்வாறு செல்லாமற் செய்வதற்காகவே உலகத்தில் ந்யாயாதிபதிகள் தீமை செய்யுமவர்களை விலங்கிட்டுச் சிறைச்சாலையிற் சில காலம் வைத்து தண்டிக்குமாப்போலே சேதநர்களின் ஹிதத்தையே சிந்தியாநின்ற பரமகாருணிகனை ஸர்வேஶ்வரனும் விபரீத மார்க்கத்திற்செல்ல யோக்யமான சேதனர்களின் கரசரணாதிகளை ஒழித்துச் சிலகாலம் வைத்துப் பின்னையும், நிர்ஹேதுகமான தனது பரம க்ருபையாலே கரசரணாதிகளைக் கொடாநிற்கும் ஆதலின்; ஸம்ஹாரமும் சேதனர்களின் ஹிதத்தைக் கருதியே செய்யா நிற்குமென்றதாயிற்று.

இந்தப்ரகாரம். ஸர்வஜகத்காரண பூதனாய் ஸர்வரக்ஷகனாய் ஸ்ரீய:பதியாய் ஸமஸ்த கல்யாண குணாத்மகனாய் ஸ்ருஷ்டி ஸ்தித ஸம்ஹாரங்களையும் பண்ணுமவனாயிருக்கும் ஸர்வேஶ்வரன், பரவ்யூஹ விபவ அந்தர்யாமி அர்ச்சாவதார ரூபங்களால் ஐந்து ப்ரகாரமாக எழுந்தருளியிருந்து நித்யமுக்த பக்தர்கள் என்கிற த்ரிவித (மூன்றுவித) மான ஆத்மாக்களையும் ஆனந்திப்பியா நிற்பன்.

இதில் பரனாவான். த்ரிபாத் விபூதியென்கிற ஸ்ரீ வைகுண்டத்தில் அனேகமாயிரம் ரத்நஸ்தம்பங்களா லலங்கரிக்கப்பட்டு உபய விபூதியிலுமுள்ளா ரனைவரும் ஒரு மூலையிலடங்கும்படி அதி விஶாலமாய் அளவிலா வானந்தத்தை உண்டு பண்ணக் கூடிய திருமாமணி மண்டபத்தில் ஸர்வாஶ்சர்ய மயமான கோப்புடைய சீரிய சிங்காதனத்தில் பன்னிரண்டிதழ்களையுடையதாய் நாநா ஶக்தி மயமான திவ்ய கமலத்தின் கர்ணிகையில் புஷ்பங்களால் பரப்பப்பட்ட திவ்யபர்யங்கத்தில் (கட்டிலில்) அனேகமாயிரம் சந்த்ரர்களை உருக்கிவார்த்தாப் போலே குளிர்ந்த புகரையுடையனாய் "சென்றால் குடையாம்" என்கிறபடியே ஸர்வவித கைங்கர்யங்களிலும் அந்வயிக்குமவனாய் பகவதநுபவத்திற்குப் போக்கு வீடாகப்பல வாய் தலைகளையுடையனாய், "ஆங்காரவாரமது கேட்டு" என்கிறபடி பகவத்குணாநுபவம் பண்ணாநின்ற நித்யமுக்தர்களின்



"ஹாவு ஹாவு, ஹாவு" என்கிற ஸாமகானத்தைக் கேட்டு ஸர்வேஶ்வரனுக்கு என்ன தீங்கு வருமோ? என்று பயசங்கை பண்ணி அக்நி ஜ்வாலையை உமிழா நின்றவனாய் ஶைத்ய மார்த்தவ ஸௌரப்யாதி குணங்களுக்குக் கொள்கலமாய் அனந்தன் என்றும் சேஷன் என்றும் சொல்லப்படுகிற திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே, "பதிம் விஶ்வஸ்ய" என்கிற ஸர்வேஶ்வரனுக்கும் தன்னுடைய ஸம்பந்தத்தால் "அப்ரமேயம்ஹி தத்தேஜ: யஸ்ய ஸா ஜநகாத்மஜா" (யாதொருவனுக்கோ ஜநககுல ஸுந்தரியான பிராட்டி அவனுடைய தேஜஸ்ஸு அப்ரமேயம்) (அளவிடவரியது) என்கிறபடி பெருமையை யுண்டுபண்ணுமவளாய் அனைத்துலகுமுடைய வரவிந்த லோசநனின் நீண்டவப் பெரியவாயகண்களையும் அல்பமாகப் பண்ணும்படியான வடிக்கோல வாணெடுங் கண்களையுடையவளாய் "பித்தர் பனிமலர் மேற்பாவைக்கு" என்கிறபடி அவனையும் மையலேற்றி மயக்கும்படியான ஸௌகுமார்யத்தையுடையளாய், போகோ போத்காத கேளியிலே பகவானுடைய ஸ்வரூபத்தையும் அல்பமாகப் பண்ணும்படியான பெருமையையுடையவளான பெரிய பிராட்டியார் வலது பக்கம் எழுந்தருளியிருக்க, அவளுக்கு நிழல்போலே யிராநின்ற பூமி நீளா தேவிகளிருவரும் இடது பக்கத்தில் ஸேவித்திருக்க, சங்க சக்ராதி திவ்யாயுதங்களா லலங்கரிக்கபபட்ட நான்கு திருக்கைகளையுடையனாய் கிரீடாதி நூபுராந்தமான அபரிமித திவ்ய பூஷணங்களால் அலங்கரிக்கப்பட்டவனாய் அஸ்தாநேபய சங்கிகளான அநந்த கருட விஷ்வக் ஸேநாதிகளான நித்யஸூரிகளாலும் முக்தர்களாலும் நிரந்தரம் பரிசர்யமாண சரணநளினனாய் ஜ்ஞாந சக்த்யாதி ஆறு குணங்களையுடையனாய் "அவாகீ அநாதர:" என்கிறபடி அதி கம்பீரமான ஸ்வபாவத்தையுடையனாய் பரவாஸுதேவாதி ஶப்தவாச்யனாய் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீமந்நாராயணன்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# அத்யமே ஶ்லோகார்த்த ததவப்ரதிஷ்டா கண்டனம்

[சேனங்குளம் கந்தாடை இராமாநுஜாசாரியார்]

ஸ்ரீ க்ருஷ்ண பாத பாதாப்ஜே நமாமி ஶிரஸா ஸதா
யத்ப்ரஸாதேந ஸர்வஸித்திர் ஹஸ்தகா ॥

1. ஸர்வஜ்ஞரான ஸ்ரீ நம்பிள்ளைகள் ப்ரஸாதித்தருளும் ஶாஸ்த்ரத்தை அநுஸரித்து பரமோதாரரும் பரமக்ருபாளுவுமான ஸ்ரீ வடக்குத் திருவீதிப்பிள்ளை, மாறன் மறையாகிய திருவாய் மொழியில் மறைந்து கிடக்கும் மஹார்த்தங்களை மந்த மதிகளும் அறிந்து வாழும்படி ஈடு முப்பத்தாறாயிரம் எழுதிவைத்தாரென்று ஸுப்ரஸித்தம்.

2. பரம ரஹஸ்யமான அர்த்தங்களை பக்ரோக்ஷணம் பண்ணாமல் உபதேசத்தில் கேட்டுத் தெளியவேண்டி, கம்பீரமான நடையில் இவர் வ்யாக்கியானம் செய்தருளினார். இந்த ரஸமறியாதார் பல வ்யாக்கியானம் செய்துள்ளார். இவைகளை ஈ ஆடுவதோ என்று பெரியோர்களும் பேசியுள்ளார்.

3. ஸ்ரீ ராமாயண ஶ்லோகங்களை இவர் திருவுள்ளம் பற்றினால் ஸாமான்யமான அர்த்தங்களை விட்டு மற்றொருவர்க்குப் புலப்படாத உஜ்வலார்த்தங்களையே உபதேசித்தருளுவர் என்னும் வ்யாப்தியுண்டு. இவரது வார்த்தைகளை பிச்சை கொள்ளுமவர்களும் பெருமதிப்பாக ஜீவிக்கப் பெறுகிறார்கள் என்பதும் குற்றமற்றது.

4. ஸ்ரீ ராமாயணம், ஶரண்யதிவ்யக்ராந்தம் ஶரண்யதாவதிதம் என்னும் ஸமாதியில், அமைக்கப்பட்டது என்பதை ஆதிஷாதி துடங்கி கடைசி வரையில் நிர்வஹிக்கலாம். ஆபாத ப்ரதீதியில் ஒரு அர்த்தமும் பர்யாலோசனத்தில் வேறர்த்தமும் தோற்றும்.

5. உஜ்வல மாணிக்கத்தையும் மலர்ந்து மணந்த புஷ்பத்தையும் பரீக்ஷிக்குமவர்கள் பின்புறத்தை விட்டு ஸ்லாக்யமான முகத்தையே பார்க்கவேணும். கப்யாஸம் என்னுமதுக்கு அர்த்தம்



கேட்ட ஸ்ரீ பாஷ்யகாரர் கண்ணீரைச்சொரிந்தார். தயாநகம் என்னும் ஶ்லோகம் விஶேஷணஸ்வாரஸ்யாதி வெறுக விருக்கவேணும் என்று சொன்னவர்: பரிஹாஸ்யரானார்.

6. காந்தாஸம்மித காவ்யத்தின் முகத்தை மாத்திரம் பார்த்துக் களிப்பது போதாது. அந்தரரஹஸ்யத்தையும் நன்குணர்ந்து ரஸிக்கவேணும்.

இத்யுபோத்காத: |

7. ராஜவித்யா ராஜகுஹ்யமித்யாதி பரமபாவனமாய் பரம குஹ்யமாய் அத்யுத்தமமான பக்தி ப்ரபத்திகளை வெளியிடவும், ஆசரிக்கவும், ஆசரிப்பித்துப் போதவுமிறே அவதார விசேஷங்கள்.

8. பரமருஷி துடங்கி பக்ஷிபர்யந்தம் பிரஸித்தமான ஶரணாகதியாகிற பரம தர்மத்தை ஆதியோடந்தமாகப் பேசவிறே ஸ்ரீராமாயணம் அவதரித்தது.

9. பலரும் தம்மிடத்தில் அனுஷ்டித்து பலம் பெற்ற இத்தர்மத்தின் ரஸமறிவதற்காகவே கிம்விதவ்யாஜேந ஸுக்கிரீவ மஹாராஜரைச் சரணம்புக்கது ஸ்ரீ பெருமாள்.

10. ஸ்வஸ்வம் ஜீவிதம் என்னும் ஸஞ்ஜீவநம் என்னும் க்ஷயிஷ்யஸி என்னும் க்ஷயிஜீவத்யவிவக்ஷேஹா என்னும் பிரமாணங்களை ஆராய்ந்தால் இத் தர்மத்தைத் தவறினவர்களுக்கு ஜீவனஹாநியேஶிக்ஷை என்று புலப்படும். இது எல்லாருக்கும் ஸமமே. ஆகையால்தான் ஸமயேதிஷ்ட என்றும் தர்மாதிக்ராந்தமென்னும் மஹாராஜரைச் சொன்னது.

11. இந்த ஶரணாநுஷ்டானம் போதாதென்று பார்த்து உள்ளபடியே விபீஷணன் உபதேசிக்க ஸமுத்திர ராஜன் பக்கலிலும் இத்தர்மத்தை அனுஷ்டித்தார். அதை அவன் ஏற்காமல் உபேக்ஷிக்க தர்மாதிக்ரமணம் கண்டு சிக்ஷிக்கதுடங்கினார். இந்த ஸங்கல்பம் முன்னமேயுண்டு. திருவடிக்கு உபசரிக்குமவன் நாம் பரம ஸம்ப்ரமத்துடன் வர எதிர் கொள்ளாமலும் உபசாரங்களை செய்யாமலும் உபேக்ஷையாயிருப்பதால் இவனை என்ன செய்வதென்று ஆலோசனை வர மஹா ப்ராஜ்ஞனான விபீஷணன்—குலமர்யாதையா

லும் அவதாரத்தாலும் இவனை ஶரணம்-செய்யத்தகுமென்று விண்ணப்பிக்க-தானுன தன்மையை யுணர்ந்து நம்மபிப்ராயமான தண்டமோவிபீஷணாபிப்ராயமான தாரணமோ பலிக்குமென்று, புத்தி பண்ணியாயிற்று ஶரணாகதி பண்ணிற்று. தன்னபிப்ராயமே பலித்தது, ஆயுதமெடுத்து அரண்யத்தில் புக்கது அரக்கர்களையும் அரக்கர்போல் வாரையும், தேடிப்பிடித்துத் தண்டிக்கவே விநாஶாய ச துஷ்க்ருதாம் இதி.

1. நிகழ்வது யாதெனில் - ஸமுத்ரம் ப்ரதிக்கு பழைய பாடமே பாடமாகும். திருத்தம் வேண்டாம் - ஸமுத்ரம் அத்ய இப்பொழுது - அத்ய - என்பதற்கு-கர்தத்ரர்தே-ஸமீப தார்த்தேவாஷஷ்டீ - ஸமுத்ரஸ்ய தாரணம் - ஸமுத்ரஸ்ய ஶரணம் ப்ரதாரணம் ஸாமர்த்யம் ஶரணம் ஸம்ப்ரதாரணம் ஸாமரஸ்ய ஶரண தாரணார்தம் இதி வாக்யார்த்த: இவ்வர்த்தம் ஈட்டின் வாக்கியத்தால் நன்குணரலாம். இத்தை ஸாமரஸ்ய இது என்று பிள்ளை நிர்வஹம் காண்க. முடித்தல்-மரணம்-கடத்தல் ஸம்ப்ரதாரணம்-செய்யுமதுக்கு மேற்படவில்லை- ஸமுத்ரம்-செய்யுமது என்று ஸ்வகர்த்ருத்வத்தையும் காலத்தையும் சொல்லி எதிர் மறையால்-தார்டயத்தையும்-சொன்னபடி.

2. இப்பொழுது நான் செய்ய வேண்டுவது கடலை முடிக்கவோ-அல்லது-தாண்டவோ என்று ஆலோசித்து-மஹா பாஹுவான ஸ்ரீராகவன் அளவிட முடியாத மஹா ததியை- நவமஸ்தி என்பது அல்லாமல் திவ்யகடாக்ஷம் செய்து சாஸ்திரம் சொன்ன முறை தவறாமல் மூன்று காரணங்களாலும் தண்டனிட்டு சயனித்தார். அசேதனங்களும் எழுந்தாடவேண்டும் ஆர்த்திகண்டும் கடலுக்கு இரக்க மெழவில்லை ஒருக்ஷணம் ஒரு முஹூர்த்தம் ஒரு பகல் மூன்று நாள் பொறுத்தார். கொண்டுவா தக்காளை என்றார் பிறகு. இதி ஸந்தர்ப்பார்த்த:

3. அசேதனங்களும் எழுந்தாடு மார்த்திகண்டும் கடலாசன் இவர் திருவுள்ளத்தில் கோபத்தை எழுப்பி-அரக்கர்களை முடிக்க நினைத்து உடம்பு சுட்டவுடன் எழுந்துவர்தான் நஜாநே நிமஸ்தவ்ய என்று சொல்லும் வஞ்சன் போல் இவனும் ஒத்தான்,



9-ல்-ஸூஹாஸ்திரமாகப் பேசபெற்ற வ்யாயொவவெஶத்தை-அறிஞர்கள் சொல்லுவது-ஸமூலமா-நிர்மூலமா என்று விசாரித்தால், கிஷ்கிந்தா காண்டத்தில் அங்கதப் பெருமாளுடைய வ்யாயொவ வெஶத்தைப் பேசினபடி ஏதேனும் பதங்களுண்டா?-அயோத்தியா காண்டத்தில் ஸ்ரீபாதனுடைய உபவேசனத்தை பேசினபடிதான் ஏதேனும் பதங்களுண்டா? - அப்படி இல்லாமலிருக்க-எங்ஙனே சொல்லுவது. பட்டினிவிட்டு விட்டுக் கிடந்ததைப்பற்றி பாட்டிகள் சொல்லும் கதை வ்யாயொபவேசம்.

10. முதல்முதல்-வ்ரதிஜ்ஞாஹாநி:॥ ஸக்ருமேவ வெடுத்துப் பொய்யே அறியாத பெருமாள்-தான் முடிய நினைத்துக்கடலை முடிக்க நினைத்தால் தான் கள்ளனுகுவர் - அப்பக்ஷத்தில் தான் அபசாரம் நேரிடும்.

11. ஆர்ஜவகுணத்தால்தான் முதலுபாயமான ஸாமத்தில் புகுந்தது. மூன்று நாளும் அவை பலியாமையால் தான் பேதங்கள் கூடாமையால்-வாமோபாயத்தில் நின்றது. ஸளலபயம் பலியாவிடத்து பரத்வம் அழகியது. 12-14-வரை-வொஷ்ய வரிஹாரம் மர்தம்-சிறிது திருவுள்ளம்-சென்றது என்பது வழ-வழ. யஜ்ஞவிஷ்காரம் ஸமுத்ரம் என்பது ஸ்ரீராமாயணம்.

15. இது விருத்தஹேது. வித்யவயஸ்யனை ஸுக்ரீவன் தூங்கினல்-அவனைக் கால் கட்டினவர் பிந்தித்தான் எப்படி கோபிக்கத் தரும்-தான் முடியவே தரும். இதனால் தர்மம் தவறினவர்கள்-தானுகவுமாம் ஆஶ்ரிதாரகவுமாம்-விரோதிகளாகவுமாம் விசேஷமில்லை, தண்டனைக்குள்ளாவாரென்றே சித்தாந்தம். இந்நினைவு எப்போதுமுண்டு.

16-26-வரை அஸ்தானே ஸம்ப்ரம: 27- பெருமாளுக்கு எப்போதும் தைந்யம் கிடையாது. ஶ்ரோதாத்தநாயகராகையால்-பிரதிஜ்ஞையில் தன்னை முடித்து கொள்வதாகப் பேசுவது காபுருஷ வார்த்தை-ஸாராம் எனபது ராவணபிப்பிராயம் - ஸாரவண மென்பது பெருமாளபிப்பிராயம், ஶரண மென்பது அஸாரம்.

28. ஶங்கா ஸமாதானம் மந்தம்.

29. விகல்பங்களில் கோடித்வயங்கள் விஷமங்களாயிருக்கவேண்டு மென்பது ஶாஸ்த்ர ஸரணி-இங்கு விஷமம் இன்ன

தென்று தெரியவில்லை-விரோதம் விவக்ஷிதமானால் - த்யூதாத ஹோதி - க்ருஷ்ணஜந்ம ஹோதி - யாவேந்த - யத்ரைவ த்யூதாத ஹோதி என்னுமிடத்தில் விரோதம் காணப்படவில்லையே-விகல்ப மெப்படி விரோதம் எப்படி-உபபாதனம் வேண்டும்.

30. கோடித்வயங்களாவன-ஸமுத்ர ராஜனை ஜீவனத்துடன் வைத்து. ஓஹாவாதக நாசகமான ஸேதுபந்தம் பண்ணிக்கடப்பதும்-ஜீவனத்தைப் போக்கி ஸேதுபந்தம் பண்ணாமல் தரையில் நடப்பதும் இவைவராஸர விருத்தமே,

31. சரணவதம் சரணாகதம் தாரணவதம் தாரண தாரணாகதம் | வதிவோத்தரீத்யா விகல்ப ஸம்பவம்

32-37. ந்யாய விசாரம் அவஸ்யகம் ||

38. கெவிக வக்ஷமெ ஸதீகம்

39. ஓயாது அகர்மகமானாலும் மாரணம் வர்க்யாதமக மாகையால் அதற்கு கர்மா ஸமுத்திரம் புசரணகம் இத்யாதி வ்யாஸவ்ய் க்ருதிஃ ஶ்ரவணம் ஹாரதவ்ய் என்னு மிடத்தில் ஹிணாயகத்வம் த்ருஷ்டம். வேறு சாஸ்த்ரம் காட்டலாம்.

40. அய்யாஹாரமும் லக்ஷணாதிகளுமில்லாமல் வாக்கியார்த்தம் முன் எழுதினபடியால் யதாச்ருதத்தில் என்ஞான்றும் எங்கும் நிறைந்து நின்ற மெய்ஞானச் சோதிக்குத் தான் குறை கூறப்படும்.

41. ஸ்ரீ ராகவன் புத்திமான் நிதிமான் ஜ்ஞாந ஸம்பன்ன் சால த்ர த்ருஷ்டி—பாம்பு கண்டு கோலெடுப்பவரல்ல. ஏற்கனவே கோலெடுத்தவர். ரஸ விசேஷம் தோற்ற க்ரமம் மாறுவதும் நம்பிள்ளைக்கு ஆவச்யகமே.

42. கீழும் மேலும் கூட்டி நினைத்தால் இதுவே ஒருபடி பொருந்தும். சரணாகதி செய்யுமவர் அர்ஜுனன் போலவும் விபீஷணன் போலவும், ஆழ்வார் போலவும் பற்றவடுச்கும் நான் முடிவன் என்றுதான் ஏன் பற்றவேணும்.

43. மணிச்சுக்கு சேரதானைப் பிடித்தார். வீரத்துக்கு சேர தனுவைப் பிடிக்கவும் நினைவுண்டு.



44. விநாசாயச என்று அவதாரத்துக்கு முன்னமே ஸங்கல்பமுண்டு. அது விசிஷ்ய இங்கு இவனிரங்காவிட்டால் முடிப்போம் என்று உதித்தது. இது வஜ்ர லிகிதம்.

45. 63 வரை சாகா வங்கரமணம்|| 61 வராயொவவெச மென்றொரு ஊசிகொண்டு மலை துளைக்க வ்யத்நம். க்ஷ்ய என்று அர்த்தம் கொண்டால் ஏன் மூன்று நாள் கழித்து எழுந்திருக்க வேண்டும். இப்பொழுது என்று கொண்டால் விவக்ஷித காலமென்று தோற்றும். அது மூன்று நாளைக்கு அவகாசம் பெறும்.

65. ஸ்ரீ பெரியவாசசான பிள்ளை உபந்யாஸம்.

70. வரை மிகவும் சூதபத்திரமா யிருக்கிறது. மிகவும் ஸங்கடம். 71. மதுதாரோதுல குலம் என்பதிற்கு ஸ்ரீபாஷ்யகாரர் அர்த்தமிட்டதுபோல் இங்கும் கவிழ்ந்த ரத்நத்தை கவிழ்க நேரே வைத்தார். காளிதாஸன் சுன்னம் அதிகம் என்பதுபோல் ஸஹ்ருதயர்க்கு வஜ்விதநாதம் அன்றோ.

72–73. குருதக்ஷிணை கொடுப்பதும் வழக்கமே.

74–78. அவஸ்யதவிசாரம்.

79. ஸ்வஸித்தாந்தம் காந்தசோதீயம் வஸ்ருதி ||

80. உடெது ர அக வஷ்ய என்றே நம பிள்ளைக்கு திருவுள்ளம். 81–83. அதிவாதங்கள்.

84. ஸ்வஸிஷாந்தம் மிக்க வழகியது. இங்கு பிரதிஜ்ஞாஸாரூப்யம் கேட்கலாம். கடலைக் கால்பிடித்துக் கடக்க கேட்கிறோம். ஸம்மதித்தால் உயிருடன் வைத்து நோக்குகிறோம். இல்லையாகில் முடித்து தரையில் நடக்கிறோம். அதுபோல் ஆழ்வார் திருவுள்ளத்தில் நிர்ஹேதுகமாக புகுந்து நித்யாநுபவம் பண்ணச் செய்கிறோம். அதுக்கு இசைந்து தானும் இல்லான் என்னும்படி மனஸை வைத்து மேல்மேலன த்ருஷ்ணையை ஆணையிட்டு வளைக்கும்படி வளர்த்து பூர்ணாநுபவம் பண்ணினானாகில் "ஸந்தமேநம்" என்கிறபடியே வாழ்விக்கிறோம். இல்லையாகில் அஸந்நேவ என்னும்படி நம்மைப் பிரித்து நின்னலாலி லேன்காண் என்னும்படி முடியச் செய்கிறோம். மாயும் வகையறியேன் பணிகண்டாய் இத்யாதி மாறி மாறி என்று கீழாக்கினவன் மேல்செய்யமாட்டான் என்பதில்லை. களபிஷ்யதி என்பது நோக்கத்தக்கது.

85. ஊசிமேல் ஸ்தாலி. அதுமேல் மஜம். தத்வவிரோதஃ || இதி ஸதீகநிர்வாஹஃ |

86. ஸ்ரீகோவிந்த ராஜீயவ்யாக்யாஸூக்தி: யதா ஶ்ருதவாதிநாம் ஸுலபமாக அர்த்தம் கொள்ளலாம். ஸந்தர்ப்ப பர்யாலோசநாஸியேடும்

87-91. தமிழர்கள் ஸிங்காம்கம் ஸம்ஸயகாநயிமதமாகலாம்

91. பெரியோர்கள் ஆண்டவிஷயம் - பக்தி பரவசர்கள் ஆழ்வார்கள். ஜ்ஞாநாதிக்யமுடையவர்கள் - ஆசாரியார்கள்-யதார்த்தில் கூடாதென்று திருவுள்ளம்.

93. வ்யாக்யாநிகர்கள் ஸரணியிதுவே

94. அச்சுப் பிழையை பெரிதாகப் பேசுவது உசிதமல்ல

95. நஹி நஹிஜாநாஸி ஜாதுஷீமஹிஷீ

96. ஆசாரியர்கள் கேட்டே அறிவதற்காக-லலிதமான வழியல்லாமல், ஸங்கேதமாக வ்யவஹரிப்பதுமுண்டு. அவ்வண்ணம் ஜ்ஞாநவதார்த்திகளின் உதாஹரணம் அவ்வண்ணம். அம்மை என்பது குறைத்தலாய்- அச்செரி என்று செலலவேண்டிற்று. அதை மஹாமுனிகளும் திருவுள்ளம்பற்றி ஆய்ச் சேரியென்று வ்யாக்ஙித்தார் அல்லது. வ்யக்தபாடத்தைபிடித்தல்ல

97. தென்மொழியில் தான் பிரஸங்கமென்றிருந்தோம் கண்டது வடமொழியிலும்; கண்டதே பாண்டித்யம் உத்கட ஏ கதாகோடிக ஸம்ஸயஸம்ஹாவாநா என்று ஸம்ப்ரஹத்தில் படித்தது. ஈட்டிலும ஸம்ஹாவனையில்லை என்று வ்யாக்யானம். இராமனில் யாமேறுட்டுவேனோ-எனில் என்கையால் விட ஸம்ஹாவனையில்லை. என்றபடி-என்றது ஸ்ரீபாஷ்ய ஞாபகம் ஸம்ஹாவநாதிகா ஸங்கா. ஸம்ஹாவ ஸத்பாவயோ: நவிஸேஷ: |

98. பெரியோர்கள் வார்த்தையும் இதுவே தான்.

99. அச்சுப்பிழை.

100. அரும்பத உரைகள் ஸ்பஷ்டமாக கூறியிருக்க ஸம்ஸய நிஸ்சயங்கள் ஆஸ்வர்யமே.

101-104. நவகம்பளோயம் தேவதத்த: என்றால். நாஸ்ய நவகம்பளா நிஸந்தி த்விதி ஸ்ர்வாஸ எனனுமாப்போலே.

105. ஆசார்யர்களிடமும் மேஹ நீயர்களிடமும் பரிதாபமும் நிவேதமும் கொள்ளை கொள்ளுமவர்கள் பாபஹரமான பகவத்பாகவத நாமங்களிருக்க ஸுநயமுகமான வெறு பில என்னுப்போல தேஸீய நாமங்களைச் சில மஹான்கள் திருத்திக்கொண்டது போல திருத்த ப்ராப்தம்.

126. ஸமாதா க்ருஷ்ணாநாம் என்பதிற்கு விஷயமாகாமல்-யுக்தியுக்தம் என்பதிற்கு |விஷயமாய்-யயாய்ம் ராமேளா வாத் என்று சில எழுதப்பட்டது ஸஹ்ருதயர்க்கு விஸ்தாரம் வேணடுவதில்லை-ஸம்ப்ரஹேணலம்.

ஸ்ரீக்ருஷ்ணவாத வாதாஸ்ஜ கேஸரத நி ஷேவிணா
ராமாநுஜாயத தாவேஸந ரஹிதேயம் விஹாவந்தாம் ||

## அத்யமே ஸ்லோகார்த்தவிசார :

[பத்ராதிபர்]

இந்த அத்யமே ஸ்லோககார்த்த விஷயமாய் ஸ்ரீ வைஷ்ணவர்களிடையே இரண்டு விதமான கக்ஷிகள் ஏற்பட்டு அதன் மூலமாய் அனேகம் பெரியோர்களுக்கு வருத்தமும் விரோதமு மேற்பட்டிருக்கின்றன. ஆதலின் |இது விஷயமாய் அதிவிசாலமான புத்தியையுடைய பெரியோர்கள் ஆராய்ச்சி செய்யவேண்டியது ஆவஸ்யகமே.

மேலும் நமது ஸம்ப்ரதாயத்தில். ஆளவந்தாரருளிச் செய்வர். பட்டர் பணிப்பர். அபியுக்தரருளிச் செய்வர். என்று பல அபிப்ராய பேதங்கள் காணப்படுகின்றமையால், அவ்வாறே இவ்விடத்திலும் அபிப்ராய பேதமுள்ளதாகக் கொண்டும் ஸமாதானமடையலாம்.

எவ்விதத்திலும் நமது ஸ்ரீ வைஷ்ணவஸமூஹத்தில் ஒருவர்க்கொருவர் வருத்தமடைவதற்கு எள்ளளவும் அவகாசமில்லை. இவ்வாறு வருத்தமன்றியில் அவரவர்களுக்குத் தோன்றும் விஷயங்களை வெளியிடுவதும் உசிதமே. அவ்வாறு வெளியிடும் காலத்தில் ஒருவர்க்கொருவர் வீணாக வருத்தமடைவது மாத்திரம் மிகவும் வருந்தத்தக்கது.

இதுநிற்க இது விஷயமாய் அறிவிற் சிறிய வடியேன் சில விஷயங்களை எழுதுவது உசித மனறுனாலும். ஊராமிலைக்கக்குருட்டாமிலைக்குமாப்போலவே அடியேனுக்குத் தோன்றிய சில விஷயங்களை வைகாசி விசாகத்தில் தெரிவித்துக் கொண்டிருக்கிறேன். அப்பால் சில பெரியோர்களுடன் இது விஷயமாய்ச் சர்ச்சை நிகழ்ந்த காலத்தில் ப்ரஸ்துதங்களான சிலவிஷயங்களை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

இத்தை முடித்தல் கடத்தல் என்று ஈட்டுப் பங்க்தியிருப்பதாலும் அதற்கநுகுணமாக அரும்பதவுரை காணப்படுவதாலும் கோவிந்தராஜர் "அத்யமே் தரணம் ஸாகரஸ்யமரணம்" என்று அந்வயித்திருப்பதாலும் நான் கடலைக் கடப்பேன் அல்லது கடலை முடிப்பேன் என்று சொல்லுவதே பூர்வாசார்யர்கள் திருவுள்ளமென்கிறது ஒரு பக்ஷம்.

இற்றை முடிதல் என்பது இத்தை முடித்தல் என்று தவறியிருப்பதாகவும். கோவிந்தராஜர் இற்றைமுடிதல் என்பதையடியொற்றியே "அத்யமே தரணம் ஸாகரஸ்ய, மரணம் வா" என்றே அந்வயித்திருக்கின்றமையாலும், அரும்பத உரை சிற்சில விடங்களில் தவறுதலாகக் காணப்படுவதாக ஸம்ப்ரதாய வ்ருத்தர்கள் நிர்வஹித்துப் போருகின்றமையால் இவ்விடத்திலும் அவ்வாறே இருக்கக்கூடுமென்றும் யாமொட்டி யென்னுள் என்கிற பாசுர வ்யாக்யாநத்தில் இதை யெடுத்து உதாஹரித்திருக்கின்ற ப்ரகாரணத்திற்

கிவ்வர்த்தம் பொருந்தாதாகையாலும், ஶரணாகதி பண்ணும்போதே அவனைக் கொல்லவும் நினைத்தான் என்பது பொருந்தாததோடு பெருமாள் ஸ்வபாவத்திற்கும் பொருந்தாது. ஆகையால் "இத்தை முடித்தல்" என்றது அச்சுப்பிழை "இற்றை முடிதல்" என்பதே நம்பிள்ளை திருவுள்ளம். அதாவது 'இன்று நான் கடலைக் கடப்பேன் இல்லாவிடில் முடிவேன்' என்பது ஒருபக்ஷம்'

இதுவிஷயமான விவாதங்கள் வைகாசி விசாகத்திலும் ஸ்ரீ. அண்ணங்கராசாரியா ரநுக்ரஹித்த தத்வ ப்ரதிஷ்டையிலும் விசேஷமாக எழுதப்பட்டிருப்பதால் அவைகளைவிட்டு அங்கு காணப்படாத சில விஷயங்களை இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

அத்யமே மரணம் வா இத்யாதிக்கு இத்தை முடித்தல் கடத்தல் என்பதாக வ்யாக்யாநமிருந்திருக்க முடியாதென்பதை விவேகிகள் எளிதி லுணருமாறு ஒரு சிறு விஷயம் இங்கு தெரிவிக்கப்படுகிறது. மேலே "ஸாகரம் ஶோஷயிஷ்யாமி" முதலான ப்ரதிஜ்ஞைக்குச் சேரவே முன்னம் ஸமுத்ர மாரணம் மனதால் நினைக்கப்பட்டது என்பதாகவே பலரும் சொல்லி வருகிறார்கள். "ஸாகரோச் சோஷணே ந வா" என்பது 19வது ஸர்க்கத்திலேயே ப்ரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அங்கு ப்ரஸ்துதமான விஷயமே "அத்யமே மரணம்" என்பதில் மனதால் ஸங்கல்பிக்கப்பட்டு அப்பால் "ஸாகரம் ஶோஷயிஷ்யாமி' என்று காரியத்திலும் காட்டப்பட்டதாக வருளிச்செய்கிறார்கள். இவ்விடத்தில் விவேகிகள் விமர்சிக்கவேண்டிய விஷயம் ஒன்றே! மரணமென்பதும் ஸாகர ஶோஷணம் என்பதும் பர்யாயமாகுமா? என்பது.

நன்கு ஆராய்வோமானால் இவை பர்யாய மாகாது. ஶோஷணம் நீரை வற்றச் செய்தல் மரணம் ப்ராணவிமோசநம், ஸமுத்ரத்திற்காவது ஸமுத்ர தேவதைக்காவது ப்ராண விமோசநமென்கிற வார்த்தை உதிக்க அவகாஶமே கிடையாது. ஸாகர ஶோஷணத்தையே தேவதையினுடைய மரணமென்போமானால் அது எப்படிப் பொருந்தும். நாம் நமது கிணற்று நீரையோ மற்றும் ஏரி தடாகங்களின் நீரையோ வற்ற வடித்து நமக்கு ஆகவேண்டிய காரியங்களை நிறைவேற்றிக் கொண்டால் இது வருண தேவதையை மரணம் செய்வித்ததாக ஆகுமோ? சரணாகதி செய்தது வருண தேவதையைக் குறித்து அவன் முகங்காட்டாவிட்டவாறே பெருமாள், அல்பனான அவன்கிடக்கட்டும் கடலை வற்றுவித்து நாம் அக்கரை செல்வோம் என நினைத்து ஸாகரஸலில ஶோஷணத்திலே ஒருப்பட்டார். அதுகண்டகடற்கரையன் அந்தோ! நமது சொத்து பாழாய்ப்போகுமே யென்று பதறி வந்து முகங்காட்டி அணைகட்ட அநுகூலனானான்.

இதனால் "ஸாகரோச்சோஷணே ந வா" என்ற விடத்திலும் "ஸாகரம் ஶோஷயிஷ்யாமி" என்றவிடத்திலும் கடல் நீரை



சோஷித்தாவது-என்றும் கடல் நீரை சோஷிப்பேன். என்று அர்த்தமாகுமே யல்லாமல் ஸமுத்ர மாரண மென்பதான வார்த்தைக்கு உதயமே கிடையாது. இவ்வாறிருக்க முன்னுக்கும் பின்னுக்கும் 'பொருந்தவே இத்தை முடித்தல் என்று வ்யாக்யாதம்' என்கிறவாதம் எவ்வாறு பொருந்தும்.

தண்ணீர் வருண தேவதையின் சரீரமாதலால் அதை வற்றச் செய்வதே தேவதையின் மரணம் என்று சொல்லுவதும் பொருந்தாது. உலகத்தில் ஏதேனும் ஒரு ஜலாஶயத்தை வற்றச்செய்தாலும் வருண மாரணம் வந்து விட்டதாகச் சொல்ல வேண்டிவரும்.

தவிரவும் உலகமெல்லாம் எம்பெருமானுடைய ஶரீரமே யாதலால் சிலசேதநா சேதனங்களுக்கு நேரும் விநாஶமும் பகவந்மரணம் என்ன வேண்டிவரும். வருணனும் ஸ்ரீ ராமபிரானுக்கு ஶரீரபூதனென்பது வேதாந்த ஸித்தமாதலால் இங்குச்சொல்லும் வருணனுடைய மரணமும் ஸ்ரீ ராமனுடைய மரணமாகவே முடிகிற தென்று சொல்லவும் நேரும். ஆதலால் இத்தை முடித்தல்- என்பது இற்றை முடிதல் என்றே இருந்திருக்கவேண்டு மென்பதே சில பெரியோர்கள் திருவுள்ளமாகக் காணப்படுகிறது.

இன்னமும் திருவிருத்தத்தில் "இறையோ விரக்கினும்" என்கிற பாசுரத்தின் வியாக்கியானத்தில் "தனக்கு ஶரணமென்றால் இரங்குமதன்றே; தனக்கு மரணமானா லிரங்கு மதிறே" என்று பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்திருக்கையாலே [ஸாகரத்திற்கு மரணம்] என்கிற அர்த்தம் அவர் திருவுள்ளத்தில் உள்ளதாகப் புலப்படுகின்றதே யென்று சில ஸ்வாமிகள் ஸாதிக்கிறார்கள். இதைப்பற்றி தத்வப்ரதிஷ்டையில் அண்ணாஸ்வாமி விரிவாக ஸமாதானம் ஸாதித்திருந்தாலும் அடியேனுடைய சிற்றறிவிற்குத் தோற்றுகிற ஸமாதானத்தை இங்கு விண்ணப்பிக்கிறேன். மேற்குறித்த வாக்கியம் ஸ்ரீராமாயணத்தில் ஸமுத்ரசரணாகதிப்ப்ரகரண விஷயம் என்று நினைப்பதற்கும் ப்ரஸக்தியில்லையே. அந்த ஸ்ரீஸூக்தியிருக்கிற ஸந்நிவேசத்தைச் சிறிது உற்று நோக்கினால் இதை எளிதில் அறியலாம். அவ்விடத்தில் மூன்று வாக்கியங்கள் உள்ளன :—

1. "இதுதான் ஶரணமென்றால் இரங்கு மதன்றிக்கே அம்புக்கு முகங்காட்டுமதிறே.

2. அது ஆர்த்திக்கு இரங்குமதல்லவே, அம்புக்கு இரங்குமதிறே; 3. தனக்கு ஶரண மென்றால் இரங்குமதன்றே; மரணமானால் இரங்குமதிறே." என்பன அங்குள்ள மூன்று வாக்கியங்கள். இவற்றுள் முதல்வா[illegible] அருளிச் செய்யப்பட்ட அர்த்தமே சிறிது வி[illegible]

19983
வைஷ்ணவ 211,N55R

இரண்டாம் வாக்கியத்தினால் அருளிச் செய்யப்பட்டது. அந்த அர்த்தமே மூன்றாம் வாக்கியத்தினாலுமருளிச் செய்யப்பட்டதென்கை அழகியதாகுமோ? வாக்கியமும் அதற்கு இணங்கினதாக இல்லையே. "தனக்கு ஶரணமெனறால்" என்பதில், தனக்கு என்றது யாரைச் சுட்டுகிறது. ஸாகரத்தைச் சுட்டுகிறது என்று பிறர் சொல்ல வேண்டும். அப்படியானால் ஸாகரத்திற்கு ஶரணம் என்கிற விந்த வாசகம் அர்த்தமற்றதாகும். ஸாகரத்தை ஶரணமென்று பெருமாள் கொண்டாரேயல்லது ஸாகரத்திற்குத் தான் ஶரணமென்று சொல்லியிருக்கவில்லையே. அன்றியும் "தனக்கு மரணமானால் இரங்குமதிறே" என்பதும் பிறருடைய அபிப்ராயப்படிக்கு அந்வயிக்கவே மாட்டாது. [மரணமனால்—ஸாகரத்திற்கு மரணமானால்] என்று கொண்டால், மரணமான பிறகு இரங்குவதற்கு என்ன ப்ரஸக்தி?

ஶரணமென்றால் என்றது போலே மரணமென்றால் என்று பங்க்தி யிருந்திருக்குமானால் ஒருவாறு பிறரது அபிப்பிராயம் பொருந்தலாம். பங்க்தி அப்படியில்லையே. மரணமானால் என்றிருப்பதை உற்று நோக்க வேணும். அதற்கு அடுத்தபடியாக முகங்காட்டு மதிறே என்றிராமல் இரங்குமதிறே என்றிருப்பதும் முக்கியமாக நோக்கத்தக்கது. ஆதலால் அது பொருளன்று. அந்த மூன்றாவது வாக்கியம் ராமாயண ப்ரகரணத்தை நோக்கியதேயன்று. தனக்கு என்றது பராங்குச நாயகி தனக்கு என்றபடி.

இக் கடலை இத் தலைமகள் இப்போது ஶரணமென்று வணங்கியிருக்கிறாள்; இப்போது இது இரங்கிற்றில்லை; "ஈங்கிவள் தன் நிறையோ இனியுன் திருவருளாலன்றிக் காப்பரிதால் முறையோ" என்றபடி இவள் முடியும்படியான நிலைமையில் உளளாதலால் அந்த நிலைமை இவளுக்கு நேர்ந்தபிறகு 'அந்தோ! முன்னமே முகங்காட்டாதொழிந்தோமே!' என்று பிறகு இரங்கும்போதும் என்பதாகவே இங்குக் கருத்துத் தோன்றுகின்றது. இக் கருத்தில், தனக்கு என்று இரண்டிடத்திலுமுள்ளது தலைமகளையே சுட்டுதலால் வைரூப்யமில்லாமல் பொருந்திவிடுகிறது. இங்ஙனம் ஸ்ரீஸூக்தி தாத்பரியம் அடியேனுடைய சிற்றறிவில் தோன்றியதை விஜ்ஞாபித்தேன். பெரியார் ஆழ்ந்து நிரூபித்து யுக்தமாக எது தெரிவித்தருளினாலும் சிரஸா வஹிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நாம் பிடித்ததையே சாதிக்கவேணுமென்கிற ஆக்ரஹம் சிறிது முடையேனல்லேன். "நாம் பெரியோமல்லோம் நாம் நன்றும் தீதும் நமக்குரைப்பாருள் ரென்று நாடுவோமே."

## வர்த்தமானம்.

### திருவாடிப்பூரமஹோத்ஸவம்.

[பத்ராதிபர்.]

அடுத்த மாதம் ஆடி மாதம். ஆடிதனிற் பூரத்தில் நமது வைஜயந்தீ பத்ரிகையின் 9 வது ஸஞ்சிகை வெளிவரப் போகின்றமையால் அத்திருவாடிப் பூரத்தில் ஆண்டாளின் பெருமையைப் பற்றியதோசிதம் ப்ரசுரிக்கப்படும். அத்திருவாடிப் பூர உத்ஸவம் ஆனியிலேயே ஆரம்பிக்கப்படுவதால் ஆனி தன்னிற்சோதி நன்னாளிலேயே அவ்வுத்ஸவம் நடைபெறும் ப்ரகாரத்தை யனைவருமறியுமாறு அடியேனறிந்தபடி தெரிவித்துக்கொள்கிறேன். ஷேடி உத்ஸவம் ஸ்ரீமான் ஆ. வா. பெ. பெரிய வாலகுரு வாரேட்டியாரவர்களின் ஆதரவில் அதிவிமர்சையாய் நடைபெறும்.

அனேகம் வித்வான்களின் உபந்யாஸங்களும், சங்கீதக் கச்சேரிகளும், மேளக்கச்சேரிகளும் நடைபெறும். மத்யானத்தில் ஸந்நிதியில் விசேஷமாய் ததீயாரதநம் நடைபெறும். இரவு ஆங்காங்கு அனேகம் பேர்களின் உதவினாயிலேற்படும் த்ரவ்ய ஸஹாயத்தைக் கொண்டு ததீயாராதனம் நடைபெறுவது வழக்கம்.

12-7-36 ஆனி 29-ல் அங்குரார்ப்பணம் புறப்பாடு

13-7-36 ,, 30 மாலை ஸேனை முதலியார்

14-7-36 ,, 31 காலை த்வஜாரோஹணம்
,, மாலை 16-வண்டிச் சப்பரம்

15-7-36 ,, 32 காலை தங்கப்பல்லக்கு தந்தப்பல்லக்கு
இரவு சந்த்ரப்ரபை ஸிம்மவாஹநம்

16-7-36 ஆடி 1. காலை தங்க, தந்தப்பல்லக்குகள்
இரவு-தந்த நாற்காலி சிறிய திருவடி

17-7-36 11 2-காலை பல்லக்குகள்.
இரவு சேஷவாஹநம் கோவர்த்தநகிரி

18-7-36 ,, 3-இன்று ஐந்தாவது உத்ஸவம் இவ்வுத்ஸவத்தை கண்ணாரக்கண்டு ஸேவித்தநுபவிக்க வேண்டுமேயல்லாமல் எழுதவும் பேசவும் இயலாது.

காலை வடபத்ரஶாயீ. 1. திருவேங்கட முடையான். 2 சுந்தரராஜன். 3. திருத்தண்காலப்பன். 4. ஆண்டாளுடன் ரங்கமன்னார் (5) ஆக இவ்வைந்து திருநாமங்களும் பெரிய கொட்டகையில் எழுந்தருள, பெரியாழ்வார் தந்தத் தோளுக்கினியானி

லெழுந்தருளி மங்களாசாஸனம் பண்ணும் வைகரியையும் அப்போது அவ்விடத்தி லெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டிகளின் பெருமையையும் பார்த்தநுபவிக்கப் பதினாயிரம் கண்கள் வேண்டும் ராத்திரி ஐந்து திருநாமங்களும் ஐந்து பெரிய திருவடியின்பேரிலும் ஆண்டாள் பெரிய ஹம்ஸ வாஹனத்திலும் பெரியாழ்வார் சிறிய ஹம்ஸவாஹநத்தின் பேரிலுமாக வீதி எழுந்தருளும் ஸேவை வாசா மகோசரம்.

19-7-36 ஆடி 4 காலை பல்லக்கு இரவு தண்டியல் ஆனைவாஹநம்

20-7-36 ஆடி 5 காலை தோளுக்கினியான் மாலை ஸ்ரீ க்ருஷ்ணன் ஸன்னிதியில் ஶயநத்திருக்கோலம்

ஜநககுல ஸுந்தரியான ஸீதாப்பிராட்டியின் மடிமீது ரகுகுல திலகனை பெருமாள் ஸயநித்துக்கொண்டிருந்தவன்று அவ்வழகை அநுபவிக்கப்பெறாத அஸ்மதாதிகளை இன்று அநுபவிப்பிப்பதற்கென்றே இத் திருக்கோலம் பூண்டதென்று சொல்லலாம். இரவு கண்ணாடிச் சப்பரத்தில் கண்டார் கண்கள் களிக்குமாறு எழுந்தருளி ஸேவை ஸாதிப்பர்கள்.

21-7-36 ஆடி 6 காலை பல்லக்கு

இரவு தங்க வட்டவணையில் ஆண்டாளும் மன்னார் குதிரை நம்பிரான்மேலிலு மெழுந்தருளி வடக்கு ரதவீதியில் வையாளி ஸேவை ஸாதித்து திருத்தேரைக் கடாக்ஷித்து எழுந்தருள்வர் 22-7-36 ஆடி 7 இன்றே நமக்காக ஆண்டாளவதரித்த திருவாடிப்பூரம். காலையில் திருத்தேருக்கு எழுந்தருள்வர்கள். இந்தத் திருத்தேர் மிகவும் பெரியது. இந்தமாதிரியான திருத்தேர் மற்றெங்கும் கண்டிருக்க முடியாது. இனிமேலும் காணவும் நேராது. இத் திருத்தேர் ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ வானமாமலை 19வது பட்டம் பெரிய பட்டர்பிரான் ராமாநுஜஸ்வாமி, பட்டர்பிரான் கோதைக்குப் பாங்காகப் பண்ணி ஸமர்ப்பித்தது. இத் திருத்தேர் ஆண்டாள் திருவுள்ளப்படி 1 நாளிலும் 1 வாரத்திலும் 1 மாதத்திலும் நிலைக்கு வரும்படி நேரும். அவ்வாறு நிலைக்கு வந்ததும் முத்துக்குறி உத்ஸவம். மறுநாள் தீர்த்தவாரி மாலை ஆஸ்தானம் அலங்கரிப்பர்கள்.

இவ்வுத்ஸவத்தில் கூடும் ஸ்ரீ வைஷ்ணவ கோஷ்டிபோல மற்றெங்கும் காணக்கிடையாது ஆதலின் "அணியரங்கன் திருமுற்றத் தடியார் தங்களின்பமுறு பெருங்குழுவு கண்டு யானுமிசைந்துடனே என்று கொலோவிருக்கும் நாளே என்று பெருமக்கள் ப்ரார்த்தித்தபடியே நமக்குக் கிடைத்திருக்குமித் திருவாடிப்பூர உத்ஸவத்தில் அடியார்கள் குழாங்களைக் கண்ணாரக் கண்டு வாயாரப் புகழ்ந்து அநுபவிப்போமாக.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத்வாதூல குரவே நம:

# ஸ்ரீ முதலியாண்டான் வைபவ ஸங்க்ரஹம்

ஸ்ரிய: பதியான ஸர்வேஶ்வரன், "தேவிமாராவார் திருமகள் பூமியேவ மற்றமரராட் செய்வார்" என்கிறபடியே நித்ய முக்தர்களாலே மீளா வடிமைப் பணிசெய்யப் பெற்றும், லீலா விபூதியிலுள்ளார்கள் அவர்களோ பாதி (நித்ய முக்தர்களைப்போல) அநுபவிக்கப் ப்ராப்தமா யிருக்கச்செய்தேயும் அது செய்யாதே "இழந்தோ மென்கிற இழவு மன்றிக்கே ஸம்ஸாரமாகிற பெருங் கடலிலே விழுந்து நோவுபட, ஸர்வேஶ்வரன் தன் க்ருபையாலே இவர்கள் தன்னை அறிந்து கரை மரம் சேரும்படி" ஸ்ரீவைகுண்டத்தை விட்டு க்ஷீராப்தியில் யோகுசெய்வான் போல் உறங்கியும் "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம்— தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்கிறபடியே ஸாதுக்களை ரக்ஷித்தும் துஷ்டர்களை சிக்ஷித்தும் தர்மத்தைப் பரிபாலனம் செய்யவும், நாராயணனாய் திருமந்த்ரத்தை வெளியிட்டருளவும், "ஆதியஞ் சோதியுருவை அங்கு வைத்து இங்குப் பிறந்து" என்கிறபடியே ஸ்ரீராமகிருஷ்ணாதி அவதாரங்களைச்செய்து ஸ்ரீகுஹப்பெருமாளோடும், மஹாராஜரோடும் தோழமை கொண்டும், ஐவர்க்காய் தூதுசென்றும் ஸாரதியாய் ஸ்ரீ கீதையை உபதேசித்தும், "படாதனபட்டு மனிசர்க்காய்" என்கிறபடியே நாட்டைத் திருத்தப் பார்த்தும் சேதநர்கள் திருந்தாமையாலே ஸர்வேஶ்வரன் நித்ய ஸூரிகளிற் சிலரை ஆழ்வார்களாக அவதரிப்பித்தான். அவர்களும் "தானே யானென்பானாகித் தன்னைத் தானே துதித்து "தொண்டர்க் கமுதுண்ணச் சொன்மாலைகள் சொல்லி" "சிந்தை கலங்கித் திருமாலென்றழைத்து" "திருப்பொலிந்த சேவடியை என் சென்னியின்மேல் பொறித்தாய்" உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்கிறபடியே பகவத் பாரதந்த்ரியத்தை வெளியிட்டு, "அடியார் அடியார் அடியார் எம்கோக்கள்" "பெரியார்க்

காட் பட்டக்கால்பெறாத பயன் பெறுமாறு" "உன்னடியார்க் காட்படுத்தாய்" "உற்றதும் உன்னடியார்க் கடிமை" "மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே தேவுமற்றறியேன் குருகூர் நம்பி" "அன்னையாய் அத்தனாய் என்னை யாண்டிடும் தன்மையான்" என்கிறபடியே பாகவத பாரதந்த்ரியத்தை வெளியிட்டார்கள். இவ்விடத்தில் ஆழ்வார்களில் கடைக் குட்டியான மங்கையர்கோன் ததீயசேஷத்வத்தை வெளியிட்டபடி "நம்பி தன் நல்ல மாமலர்ச்சேவடி சென்னிச் சூடியும் தொழுதும் எழுந்தாடியும்" என்கிற பாசுரத்தைப் பெருமாள்கேட்டு இவர் கால்வாசி அறிந்தவரா யிருந்தாரென்று "ஆழ்வீர்! நம் திருச்சேறையிலே வாரீர் உம்முடைய அபேக்ஷிதத்தைத் தலைக்கட்டுகிறோம்" என்ன இவர் திருச்சேறையிலே எழுந்தருள இவ்வாழ்வாருடைய அசைந்த வளையத்திலே அழகை வழிய வார்த்தாப்போலே தம்முடைய திருவடிகளைக் கொண்டுவந்து வைக்கப்புக அதைப்புறங் கையாலே தட்டி "உன்பொது நின்ற பொன்னங்கழலோ" என் தலைமேலிருப்பது" என்ன? அதைக்கேட்டு லஜ்ஜா விஷ்டராய் உமக்கு அந்தர்யாமியா யிருந்தோமே என்ன "எம்பெருமான் தாள் தொழுவார் எப்பொழுதும் என் மனத்தே யிருக்கின்றாரே என்ன, ஆகிலும் நாம் அர்ச்சாவதாரமாய் ஸுலபமான தெய்வமா யிருந்தோமே என்ன கடல் மல்லைத்தலசயனத்துறைவாரைக் கொண்டாடும் நெஞ்சுடையார் அவர் எங்கள் குலதெய்வமென்ன, ஆகில் அடியிலே நமக்கு தாஸரென்று புகுந்தீரே என்ன, "மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்தும் கற்று நான் உற்றதும் உன் அடியார்க் கடிமை" என்ன, முன்பு நம்மைக் கவிபாட இழிந்து நம்மடியார் திறத்திலே மண்டிற்று என்? என்ன, "ராஜ புருஷ:" என்னுமா போலே ஒருவனைக் கவிபாடுமவன் ஊரும் பேரும் தாரும் குடியும் வைத்துக்கவி பாடுமாபோலே சொன்னேனித்தனை, ததீய விஷயமே உத்தேஸ்யம் என்ன ஆகிலும் பிரித்தும் சொன்னீரே என்ன, பர்த்தாவின் தேஹத்தை விரும்பின பதிவ்ரதைக்குக் குற்ற முண்டாகிலிறே திவ்ய மங்கள விக்ரஹத்தை விரும்பின அடியேனுக்குக் குற்ற முண்டாவதென்று தமக்குத் ததீய விஷயத்திலுண்டான ஊற்றத்தைச்சொல்ல, ஈஸ்வரன் திருவுள்ளம் களித்து இவ்வாழ்வாருக்குத் தோற்றோமென்று இவர் திறத்திலே மடலெடுக்கும்படியாயிற்று ஈஸ்வரன் திருவுள்ளம். இப்படி ததீ



யர் விஷயத்திலே யுண்டான போக்யதையை விரும்பி "பண்டு தொண்டு செய்தாரை மண் மிசை மேவி" என்கிறபடியே சேஷத்வமே நிரூபகமான ஆயிரம் பணாமணிகளோடுகூடிய ஆதிசேஷனை விளித்து "கலியும் கெடும் கண்டு கொண்மின்" என்கிற ஆழ்வார் பாசுரத்தை திருவுள்ளம்பற்றி கலி புருஷனுடைய கொடுமை நீங்கி க்ருதயுகம் போலே ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியைக் கொண்டாடின ப்ரகாரம் நம் தர்சனத்தை நாட்டித் "தன்பால் மனம் வைக்கத் திருத்தி வீடு திருத்துவீராக" என்று ஆஜ்ஞாபித்துத் தாமும் இவ்விருள் தருமா ஞாலத்தில் இக்கலியுகத்தில் திருவவதாரம் செய்தருளத் திருவுளம்பற்றி ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநா சார்யோபய வேதாந்தாசார்ய தர்சந ஸ்தாப நாசார்ய பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய உபய விபூதி நாயகரான ஸ்ரீ எம்பெருமானாருக்கு பாகிநேயரும் ப்ரதாந சிஷ்யருமான ஸ்ரீ முதலியாண்டானாக அவதரித்தருளினார்.

ஸ்ரீ முதலியாண்டான் திருவவதார ஸ்தலம் தொண்டை மண்டலத்தில் பெருமாள் கோவிலுக்குப் பூர்வ பாகத்தில் பச்சை வாரணப் பெருமாள் கோவில் என்று வழங்கப்படுகிற ஸ்ரீ புருஷமங்கலம். திருத்தகப்பனார் வாதூலகுல திலகரான அநந்த நாராயண தீக்ஷிதர். திருத்தாயார் ஸ்ரீ எம்பெருமானாருடைய ஸஹோதரிகளான நாச்சியாரம்மன் (1) தாமரை யாளம்மன் (2) என்கிற இருவரில் மூத்தவரான நாச்சியாரம்மன். குலம் வடமாள்; கோத்ரம் வாதூலம். யஜுஸ்ஸாகை. ஆபஸ்தம்ப ஸூத்ரம்; வாதூல திலகரான அநந்த நாராயண தீக்ஷிதருக்கு வெகுகாலம் புத்ர ரில்லாமையாலே தம்பதிகளாய் திருவேங்கட யாத்ரையாய்ப் புறப்பட்டு வழியில் திரு நின்ற வூரிலே ஏரிகாத்த இராமன் ஸந்நிதியில் இராத்ரி விஸ்ரமித்திரா நிற்க, பூர்வம் இக்ஷ்வாகு வம்ஸத்தில் தசரத சக்ரவர்த்தியின் திருவாராதநப் பெருமாளான ஸ்ரீரங்கநாதன், இராவணனால் நேர்ந்த இடுக்கண்களைக் கூறிக் கொண்டு கழுத்தில்கட்டின கப்படங்களுடனே தேவ ஜாதிகள் யாவரும் க்ஷீராப்தியில் செய்த சரணாகதிக் கிரங்கி தானே கௌஸல்யாருடைய கர்ப்பத்தை விரும்பினாற்போலே அநந்த நாராயண தீக்ஷிதருடைய திருவாராதநப் பெருமாளான ஸ்ரீராம திவாகரரும் பரவ்யூஹங்களிலே "சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம் நின்றால் மரவடியாம் நீள் கடலுள்

என்றும் : புணையாம் மணி விளக்காம் பூம்பட்டாம் புல்கும் அணையாம் திருமாற்கு அரவு" என்கிறபடி தம்முடைய விபவாவதாரத்திலே "அழும் தொழும் ஸ்நேஹ பாஷ்பாஞ்சலியோடே ருசிர ஸாநுக்களில் "வாளும் வில்லும்கொண்டு பின் செல்வார் மற்றில்லை" (?) "வாளும் வில்லும்கொண்டு பந்துவும் பிதாவும் அவரே" என்கிறபடியும் "ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை "செய்த ஆதி சேஷனை இளைய பெருமாளுடைய சேஷ வ்ருத்திக்கு உகந்து தாமும் அவருக்கு அப்படிப்பட்ட சேஷ வ்ருத்திகளைச் செய்ய விரும்பியும், "பூர்வம் யோபரதார்த்தித: ப்ரதிநிதிம் ஸ்ரீபாதுகா மாத்மநோ ராஜ்யாய ப்ரததௌ ஸ ஸஸவஹி குரு ஸ்ரீதாஸரத்யாஹ்வய:—பூத்வா லக்ஷ்மண பாதுகாந்திம யுகே ஸர்வாத்மநாம்ஶ்ரேயஸே ஸாம்ராஜ்யம் ஸ்வயமத்ர நிர்வஹதி நோ தைவம் குலஸ்யோத்தமம்! என்கிற ஸ்ரீமணவாள மாமுநிகளினுடைய முக்தகம் இவ்விடத்தில் அநுஸந்தேயம். ஸ்ரீபரதாழ்வானும் "அன்னையென் செய்யிலென் ராஜ்யமும் யானே யென்று பெருஞ்செல்வமும் இச்சியாமல் வேண்டிச்சென்று திருவடியே சமந்து விரைந்து வருமளவும் கண்ண நீர் பங்கமாக நிலந்துழாவிக் குடிக்கிடந்த கையறவும்" என்கிறபடியே பகவத் ப்ராவண்யத்தினால் "யானே யென்றனதே" என்கிற ஸ்வாதந்தர்யத்தை ஸஹியாதவராய் "யானே நீ என்னுடைமையும் நீயே" என்கிறபடியே நானும் ராஜ்யமும் எம்பெருமானுக்கே சேஷமென்று அறுதியிட்டுப் பெருமாளை மீட்டுக் கொண்டுவந்து, திருவபிஷேகம் பண்ணிவைக்கையில் அபேக்ஷை தோன்ற ஸ்ரீராமபிரான் திருவடிகளிலே சென்று "அயாசத் ப்ராதரம் ராமம்" என்கிறபடியே மீண்டு எழுந்தருள வேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவர் அது செய்யாதே "பாதுகேசாஸ்ய ராஜ்யாய ந்யாஸம் தத்வா புந: புந: "என்கிறபடியே திருவடி நிலைகளைக் கொடுத்துவிட, பரதாழ்வானும் திருவடி நிலைகளை சிரஸா வஹித்துக்கொண்டு ஹ்ருஷ்டராய் மீண்டுபோந்து, திருவடி நிலைகளைப் ப்ரதிநிதியாக வைத்துப் பட்டாபிஷேகம்செய்து ஸ்ரீபாதுகைகளினுடைய வைபவத்தாலே ஸர்வாத்மாக்களும் ஶ்ரேயஸ்ஸை அடைந்தாற் போலே இந்தக் கலியுகத்திலேயும் ஸர்வாத்மாக்களையும் உஜ்ஜீவிப்பிக்கும் பொருட்டு ஸ்ரீ லக்ஷ்மண முநியின் பாதுகைகளாக விரும்பியும் அநந்த நாராயண தீக்ஷிதருடைய



ஸ்வப்நத்திலே புத்திரனுக்காக. நீர் திருவேங்கட யாத்ரை செய்யவேண்டா. பூர்வம் நாம், தயரத தநயனாய் நம்முடன் பிறந்த ஸௌமித்ரியை ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தைகளிலும் ஸர்வ ப்ரகாரங்களாலும் அடிமையாகக்கொண்டு நலிந்தோம், அந்த ஸௌமித்ரியே இந்தக் கலியுகத்தில் "யதாவ தராந் மதுராமுராரே ராமஸ்ய ஸாகேதபுரீச யத்வத்—ததா யதீந்த்ரஸ்ய க்ருபாஶ்ரயஸ்ய புண்யோத்தரா பூதபுரீ பபூவ," என்கிறபடியே ஜகத் உஜ்ஜீவ நார்த்தமாக ஸ்ரீபெரும் பூதூரில் ஸ்ரீமான் இளையாழ்வாராகச் சித்திரையிற் செய்ய திருவாதிரையில் அவதரித்திருக்கிறார். நாமும் உம்முடைய தேவியார் கர்ப்பத்தில் அவதரித்து அவரை ஆஶ்ரயித்து க்ருதார்த்த ராவோம் என்று திருவாய் மலர்ந்தருளினார். அநந்த நாராயண தீக்ஷிதரும் கண்விழித்து ஆநந்த பரவஶராய்த் தன் பத்நிக்கு ஸ்வப்நம் இருந்தபடியைச் சொல்லி ஸ்வஸ்தாநமான பச்சை வாரணப்பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளினார். பெருமாளும் "அடையார் கமலந்தலர்மகள் கேள்வன் கையாழி என்னும் படையோடு நாந்தகமும் படர் தண்டும் ஒண்சார்ங்க வில்லும் புடையார் புரி சங்கமும் இந்தப் பூதலம் காப்பதற் கென்று" ஒருங்கே ஸ்ரீமுதலியாண்டானாக "அநந்த நாராயணார்யாத் கோதாம்பா கர்ப்ப ஸம்பவம்—பாகிநேயம் யதீந்த்ரஸ்ய பஜே தாஶரதிம் குரும் "மேஷேபுநர்வஸுதிநே தாசரத்யம்ஶஸம்பவம்—யதீந்த்ரபாதுகாபிக்யம் வந்தே தாசரதிம் குரும்" என்கிறபடியே ப்ரபவ வருஷம் சித்திரைமாஸம் புநர் வஸு நக்ஷத்திரத்தில் அவதரித்தருளினார். தீக்ஷிதரும் அதிஸந்துஷ்டராய் இவருக்கு, தம் ஸ்வப்நத்திற்கு அநுகுணமாக முதலியாண்டா னென்று திருநாமம் சாத்தியருளினார். முதலிகளாவார் நம் பூர்வாசார்யர்களான நாத யாமுன ப்ரப்ருதிகள். ஆண்டான் இவர்களை ஆண்டவன் ஸ்ரீமந் நாராயணன்:—முதலிகளாவார் - வாநரஸேனைகள். ஆண்டான் ஆண்டவன் என்பதினால் ஸ்ரீராமன் என்று பொருள் படுகிறது. தாசரதி என்கிறபதம் தசரத சக்ரவர்த்திக்கு மற்றைய குமாரர்கள் இருக்கச் செய்தேயும் ஸ்ரீராமபிரானையே நிரூபிக்கையாலே முதலியாண்டானுக்கும் தாசரதி என்று வழங்கப்பட்டது. இவருக்கு மறு திருநாமங்கள் இராமாநுஜன் பொன்னடி, ஸ்ரீவைஷ்ணவ ஶிரோபூஷணம் "பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி

யதர்க்யயா—தஸ்ய தாசரதே: பாதௌ சிரஸா தாரயாம்யஹம்" ஸ்ரீவைஷ்ணவ சிரோ பூஷா ஸ்ரீராமாநுஜ பாதுகா—ஸ்ரீவாதூல குலோத்தம்ஸ: ஸ்ரீதாசரதி ரேததாம்" என்கிறபடியே இவர் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஶிரோ பூஷணமாவது, நம்பெருமாளுக்கு திருப்பொலிந்த சேவடியான நம்மாழ்வாரும், இவருக்கு (ஆழ்வாருக்கு)த் திருவடிகளான, "மாறன் அடிபணிந்துய்ந்தவன்" என்றே நிரூபகமான நம்மி ராமாநுஜனும் எப்படி ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஶிரோ பூஷணமோ? அப்படியே "பாதுகேயதிராஜஸ்ய" என்கிறபடி நம்மிராமாநுஜனுக்குத் திருவடிகளான இராமாநுஜன் பொன்னடி என்று வழங்கப்படுகிற நம் முதலியாண்டானும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு சிரோ பூஷணமாகிறாரிறே.

எம்பெருமானார் ஆஶ்ரமஸ்வீகாரம் செய்தருளினார் என்கிற வ்ருத்தாந்தத்தைக் கேட்டுக் கந்தாடைக் குலத்துக் கெல்லாம் கூடஸ்த்தரான ஆண்டானும், ஹாரீதகுலதிலகரான ஆழ்வானும் பெருமாள் கோவிலுக்கு எழுந்தருளி இராமாநுஜனை ஸேவித்து அவர் திருவடிகளிலே பஞ்ச ஸம்ஸ்காரங்களைப் பெற்றார்கள். இவர்களுக்கு ஸ்ரீபாஷ்யாதி ஸகல ரஹஸ்யார்த்தங்களும் ஸாதித்தருளினவர் எம்பெருமானார். ஆண்டானுக்கு திவ்யப்பரபந்தங்கள் ஸாதித் தருளினவர் திருந்தகப்பனாரான அனந்த நாராயண தீக்ஷிதர்.

எம்பெருமானார் திருக்கொட்டியூர் நம்பியிடத்தில் ரஹஸ்யார்த்தங்களை அதிகரிக்கப் பதினெட்டுத்தரம் நடந்தும் லபிக்காமையால் அவருடைய சிஷ்யர் ஒருவரிடத்தில் தன் ஆர்த்தியை விண்ணஞ்செய்து போகவிட, நம்பியும் அதைக்கேட்டு உகந்தருளி தண்டும் பவித்ரமுமாக தாம் ஒருவரே வருவதென்று சொல்லிப் போகவிட, உடையவரும் அதிக உகப்போடே ஆழ்வானையும் ஆண்டானையும் அழைத்துக்கொண்டு நம்பி ஸந்நிதியில் சென்று தண்டனிட்டு நிற்க, நம்பியும் உம்மை ஒருவரையன்றோ வரச் சொன்னோம், இவர்களைக்கூட்டிக்கொண்டு வருவானேன்? என்ன, உடையவரும், தேவரீர் தண்டும் பவித்ரமுமாக வரச்சொல்லுகையாலே தண்டும் பவித்ரமுமான இவர்களைக் கூட்டிக்கொண்டு வந்தேனென்ன நம்பியும் தண்டு யார்? பவித்ரம் யார்? என்ன உடையவரும் ஆண்டானைத் தண்டென்றும் ஆழ்வானைப் பவித்ரமென்றும் விண்ணப்பம் செய்ய, நம்பியும் இவர்களைத் தவிர மற்றொருவர்க்கும் சொல்லவேண்டாமென்று நியமித்து, உடையவருக்குத் திருமந்த்ரார்த்தத்தை ஸாதித்தருளினார். நம்பியும் உடையவருக்கு, இன்னமும் உமக்கு ஓர் அர்த்தம் சொல்லுகிறோம் இப்போதுபோய் நீரொருவரே வாருமென்ன, உடையவரும் கோயிலுக்கெழுந்தருளி, பின்பு திருக்கோட்டியூருக்கெழுந்தருள நம்பியும் உகந்து ச்லோகார்ந்தத்தை அருளிச் செய்யக் கேட்டு, நம்பி நியமநத்தாலே ஆழ்வானை மாஸோபவாஸம் கொண்டு இவ்வர்த்தங்களை ஆழ்வானுக் கருளிச்செய்ய, முதலியாண்டானும் தண்டனிட்டு அடியேனுக்கும் இவ்வர்த்தங்களை அருளிச்செய்ய வேணுமென்று கேட்க, உடையவரும் நீர் நம்பிஸந்நிதிக்குப்போய் கேளுமென்ன, ஆண்டானும் நம்பியை ஆறுமாஸம் ஸேவித்து நிற்க, நம்பியும் ஆண்டானைப் பார்த்து முக்குறும்பு போனால் எம்பெருமானார் தாமே அருளிச்செய்வர் என்று தம் திருவடிகளை ஆண்டான் திருமுடியிலே வைத்து விடைகொடுத்தருள, ஆண்டானும் உடையவரைத் தண்டனிட்டு நிற்க உடையவரும் அவருக்கு ஶ்லோகார்த்தத்தை அருளிச்செய்து, இப்போது தமக்குத் தண்டும் பவித்ரமும் கை புகுந்ததென்று அருளிச் செய்தார். உடையவரும் ஆழ்வானுடனே கோயிலுக்கெழுந்தருளி முதலியாண்டானையும் உசாத்துணையாகக் கொண்டு ஸ்ரீ பாஷ்யம் தலைக்கட்டியருளி ஸ்ரீ ஆளவந்தாருடைய முதல் நினைவைப் பூர்த்தி செய்தருளினார்.



எம்பெருமானார் முதலிகளைப் பார்த்து நம்முதலியாண்டானை ஒழிய ஸர்வ ஸங்க பரித்யாகம் பண்ணினோம் என்று அருளிச்செய்ய, முதலிகள் அப்படி அருளிச்செய்யலாமோ என்று கேட்க நம்கையில் முக்கோலை விடிலன்றோ நம்முதலி யாண்டானை விடுவதென்று அருளிச்செய்தார். "அஜஹத் பாகிநேயத்வம் பாதுகாத்வம் த்ரிதண்டதாம் ஸம்ப்ராப்தோ யதிராஜஸ்ய குணைஸ் தத்ப்ரீதிஹேதுபி:" இப்படி இவர்கள் அவதாரச் சேர்த்தியையும், பிரியாமையையும் நோக்குங்கால் ஸ்ரீவிசிஷ்டாத் வைதத்தை நிலைநாட்ட ஏகாக்ஷரமான ப்ரணவமே மூவராக அவதரித்தது என்று சொல்லவேண்டிய தாயிருக்கிறது. எம்பெருமானார் மிதிலைச் சாலக்ராமத்திற் கெழுந்தருளி அங்கிருக்கிற விரோதிகளை முதலியாண்டானுடைய ஸ்ரீபாத தீர்த்த வைபவத்தாலே திருத்திச் சிஷ்ய ராக்கிக்கொண்டு தொண்டனூருக்கு எழுந்தருளினார். "ஸ்ரீராமாம்ஶ ஸமாவிஷ்டம் பாஞ்ச ஜந்யாம்ஶ ஸம்பவம்—பஞ்ச

நாராயண ஸ்தாந ஸ்தாபகம் குருமாஶ்ரயே என்கிறபடியே இவர் பஞ்சநாராயண ஸ்தலங்களை ஸ்தாபித்தார்.

எம்பெருமானார் திருவரங்கேசனுடைய ஸ்ரீகார்யத்தைக் குறைவற ஆராய்ந்து கொண்டிருக்கச் செய்தே தாமும் திருக்கோட்டியூர் நம்பி முதலான பஞ்ச ஆசார்யர்கள் ஸந்நிதியிலும் ஸகலார்த்தங்களையும் லபித்து உபயகைங்கர்யத்திற்கும் ஆழ்வானையும் ஆண்டானையும் கடவராக்கி ஆழ்வானை யாத்ராஸஹராக்கி, ஆண்டானுக்குச் செங்கோல் ப்ரஸாதிக்கும்படி ஸந்நிதியிலே விண்ணப்பம் செய்ய, பெருமாளும் போர உகந்தருளி உமக்குப் பாதுகையான தாசரதி நம்வீட்டை ஆராயக்கடவர். நீர் நம்முடைய ஆராமங்களையும் ஒரு ஒருங்கிட்டு நம் தர்ஶனத்தில் களையறுத்து எம்பெருமானார் தர்சனமே ஸர்வோத்க்ருஷ்டமென்று ஜயஸ்தம்பம் நாட்டிவாருமென்று விடை ஸாதித்து, முதலியாண்டானுக்குச் செங்கோல் வரிசையும் ஸாதித் தருளினார். முதலியாண்டானும் குறட்டிலே யிருந்து கோயில் கார்யத்தையும் உள்ளே புகுந்து கருவுகல வாசலிலே யிருந்து திருமேனி உபசாரத்தையும், ஸந்நிதியிலே யிருந்து திருப்பவள உபசாரங்களையும் உடையவர் நியமனப்படி ஆராய்ந்து கொண்டு அனைத்தழகும் கண்டருளப் பண்ணிக் கொண்டிருந்தார்.

எம்பெருமானார் நடாதூரம்மாளை நித்யமாக வேதவிண்ணப்பத்திலே கீதாபாஷ்யமான உடனே சாரீரக பாஷ்யத்தையும் விண்ணப்பம் செய்யச்சொல்லி நியமித்தருள அது முதலாக வேத விண்ணப்பத்திலே ருக்வேதமும் ஸ்ரீபாஷ்யமும் தாம் செய்தருளிய கத்யத்ரயத்தையும் ஆண்டானுக்கு நியமித்தருளினார் "ஸ்ரீரங்கநாத ஸ்ரீகார்ய துர்யோ வாதூலதேஶிக:-ஏததே யதிராஜாங்க்ரிர் வாதிமத்தேபகேஸரீ," என்கிறபடியே இவருடைய ப்ரபாவங்கள் வாசாம கோசரம்.

முதலியாண்டானுக்கு எம்பெருமானாரால் ப்ரஸாதிக்கப் பட்டதிருவாராதநப்பெருமாள் அழகிய சிங்கர். இருப்பிடம் கோயில். இவர் செய்தருளின க்ரந்தம் ரஹஸ்யத்ரயார்த்தம்.

கூரத்தாழ்வான் ஸ்ரீ பாதத்தில் முதலியாண்டான் தண்டன் ஸமர்ப்பித்து விண்ணப்பம் செய்தபடி :—ஸ்ரீ விபீஷணாழ்வான் ஸ்வார்த்தியோ அல்லது அநந்யப்ரயோஜநரோ? என்ன, ஆழ்வான் அருளிச்செய்தபடி :—விபீஷணாழ்வான் அநந்யப்ரயோஜநரென்ன,



வர்த்தந்தே நாந்தரிக்ஷ க்ஷிதிக்ஷயாத் மதிக்ஷயாந் நிவர்த்தந்தே நகோவிந்தகுணக்ஷயாத் என்கிறபடி பகவத்குணங்கள் எவ்வளவேனும் அதிஶயித்த ஜ்ஞாநமுடையார் எவ்வளவுகாலம் வர்ணித்தாலும் வர்ணிக்க முடியாதவைகளாதலின் சுருக்கமாகச் சொல்லிமுடிக்கிறார். ஸசஸர்வகுணோபேத: என்று. கௌஸல்யாநந்த வர்த்தந: ஸச இவ்விடத்தில் சகாரம் ஏவகாரார்த்தமாய் அந்யயோக வ்யவச்சேதகமாகிறது. அதாவது, கௌஸல்யா தேவியாருக்குப் புத்ரனாயவதரித்தவிஷ்ணுவே வேதாந்தங்களில் சொல்லப்பட்ட ஸமஸ்த கல்யாண குணாத்மகனான ஸர்வேஶ்வரன். மற்ற ப்ரஹ்மாதி தேவர்களில் ஒருவனன்று என்பது.

தஶரத நந்தந: என்னுமல் கௌஸல்யாநந்த வர்த்தந: என்றது புத்ரலாபம் கௌஸல்யாதேவியாருக்கே தஶரதனுக்கன்று என்று தோற்ற. இதை அடியொற்றியே "கௌஸல்யாலோகப்ரத்தாரம் ஸுஷுவேயம் மநஸ்விநீ" என்றதும்.

ஒத்தார் மிக்காரையில்லாத பெருமையைப் பேச உபக்ரமித்து இவனுடைய ஓரோர் குணங்களுக்கும் விபூதியில் உயர்ந்த வஸ்துக்களிலுள்ள உத்தம குணங்களையும் விபூதிமானையும் ஒப்புச்சொல்ல வேண்டும்படியிறே சக்ரவர்த்தித் திருமகனாரின் குணங்களிருப்பது என்கிறார் ஸமுத்ர இவ என்று துடங்கி

சமுத்ர இவ காம்பீர்யே காம்பீர்யத்தில் ஸமுத்திரத்தோடொப்பர். காம்பீர்ய மென்பது தனக்குள்ளிருக்கும் பதார்த்தங்களைப் பிறரறியாமல் மறைத்துக் கொண்டிருத்தல். ஸமுத்ரமானது தனக்குள்ளிருக்கும் ரத்நாதிகளை எவ்வாறு மறைத்துக் கொண்டிருக்கின்றதோ அவ்வாறே ராமனும் தன்னுடைய பரத்வத்தை மறைத்துக் கொண்டிருப்பன்.

தைர்யேண ஹிமவாநிவ தைர்யத்தால் இமயமலையோடொப்பர். தைர்யமாவது, சோகத்திற்குக் காரணமுண்டானபோதும் சோகியாதிருத்தல். "கிரயோவர்ஷ தாராபிர் ஹந்யமாநா ந விவ்யது: அபிபூயமாநா வ்யஸநைர் யதாதோக்ஷஜசேதஸ:" என்கிறபடி தன்னையாஶ்ரயித்தவர்களின் தைர்யத்திற்குபமேயமாகச் சொன்ன பர்வதமே இவர் தைர்யத்திற்குபமானமானபடி.

விஷ்ணுநா ஸத்ருஶோ வீர்யே ஸோமவத் ப்ரியதர்ஶந:
விஷ்ணுநா ஸத்ருஶோ வீர்யே ஸோமவத் ப்ரியதர்ஶந:

விஷ்ணுநா ஸத்ருஶ:வீர்யே வீர்யத்தில் விஷ்ணுவோடொப்பர். அவதாரத்தில் அர்த்தமே பூர்ணத்திற்கு ஸத்ருஶமானபடி. விஷ்ணோரர்த்தமிறே ராமன். "ஸஉஶ்ரேயாரங்பவதி ஜாயமாந:" உண்மையை நிரூபித்தால் விஷ்ணுவையும் அதிஶயித்திருக்குமிறே இவர் வீர்யம். ஏதோ ஒரு திருஷ்டாந்தம் சொல்லவேண்டுமே என்று சொன்னுனித்தனே.

ராமஶ்ஶஸ்த்ரப்ருதாமஹம். என்று த்ருஷ்டாந்தமாகச் சொன்னுலும் வீர்யமாத்ரத்திற்கே த்ருஷ்டாந்தமாகச் சொன்னபடி. ஸௌஶீல்ய ஸௌலப்யாதிகள் இங்கு விஶேஷித்திருக்குமென்றபடி.

ஸோமவத் ப்ரியதர்ஶந: த்ருஷ்ட ஏவஹிநஶ்ஶோகம் என்கிறபடி கண்டபோதே சோகம் போவதுடன் சந்த்ரதர்ஶநம்போலே போக்யமாயுமிருப்பன்.

12. 𑌕𑌾𑌲𑌾𑌗𑍍𑌨𑌿𑌸𑌦𑍃𑌶𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧𑍇 𑌕𑍍𑌷𑌮𑌯𑌾 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌸𑌮𑌃
𑌧𑌨𑌦𑍇𑌨 𑌸𑌮𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌗𑍇 𑌸𑌤𑍍𑌯𑍇 𑌧𑌰𑍍𑌮 𑌇𑌵𑌾𑌪𑌰𑌃

12. காலாக்நிஸத்ருஶ: க்ரோதே க்ஷமயா ப்ருதிவீஸம:
தநதேந ஸமஸ்த்யாகே ஸத்யே தர்ம இவாபர:

தண்ணீர் போலே குளிர்ந்த திருவுள்ளத்தையுடைய சக்ரவர்த்தித் திருமகனுக்கு க்ரோதமுண்டோ? என்னில்! உண்டு. எப்படியெனில்! ஈஸ்மரத்யபகாராணும் ஶதமப் யாத்மவத்தயா (அனேக அபராதங்களைப் பண்ணினுலும் அவைகளைக் கவனிக்கமாட்டான்) என்று சொல்லப்படுகையால் தன்விஷயத்தில் எவரேனும்அபராதம் பண்ணினுல் அதைக்காணக்கண்ணிட்டிருப்பன். ஆஶ்ரித விஷயத்தில் எவரேனுமபராதம் செய்வரேல் அவர்திறத்து நீரிலேநெருப்புக்கிளருமாபோலே குளிர்ந்ததிருவுள்ளத்திற் சீற்றமுண்டாய் காலாக்நிஶத்ருஶராய் (ஊழித்தீயோடொத்து) இருப்பர். காலாக்நியும் நீரிலெழும் நெருப்பிறே! "𑌤𑌤𑌃 𑌶𑍈𑌲𑌨𑌿𑌭𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌂 𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌰𑌾𑌘𑌵𑌃 𑌬𑌭𑍂𑌵 𑌸𑌂𑌰𑌬𑍍𑌧𑌾𑌕𑍍𑌷𑌃 𑌯𑍁𑌗𑌾𑌨𑍍𑌤 𑌇𑌵 𑌪𑌾𑌵𑌕𑌃" ததவஸ்தம் ஸமீபஸ்த: லக்ஷ்மணம் ப்ரெக்ஷ்ய ராகவ: பபூவ ஸம்ரப்ததரோ யுகாந்த இவ பாவக: (ராவணனுல் விடப்பட்ட ஶக்தியினுலடிக்கப்பட்டுப் பூமியில் விழுந்து கிடக்கின்ற அந்த அவஸ்தையையடையாநின்ற இளைய பெருமாளை ஸமீபத்திலிராநின்ற பெருமாள் பார்த்து அதிபரபரப்புடன் ப்ரளயகால அக்நிபோலானுர்) நீருக்கு



ஶைத்யம்போலே தயா, க்ஷமா, வாத்ஸல்யம் முதலான குண ஸமூஹங்களே இவர்க்கு ஸ்வபாவமாகவுள்ளன. கோபம் ஔபாதிகமாய் (காரணமடியாக வந்ததாய்) கார்யம்முடிந்ததும் கழிந்து நிற்கும்.

க்ஷமயா ப்ருதிவீ ஸம: பொறுமையால் பூமியோடொப்பர். அதாவது, ஏதாவது ஒரு காரணத்தைக் கொண்டாவது தங்களது அறிவின்மையினுலாவது யாரேனும் தம்மிடத்துத் தீங்குசெய்வார்களேயானுல், அதைப் பொறுத்துக் கொண்டிருப்பதோடு நிற்காமல் மேன்மேலும் அவர்க்கு நன்மை செய்யும் விஷயத்தில் தன்னைத் தோண்டுவோரைத் தாங்கும் தரை (பூமி.) யோடொப்பர்.

த்யாகே தநதேந ஸம: (வறியராயெற்றார்க்கில்லை என்னுமல்) கொடுத்தலில் குபேரனேடொப்பர். த்யாகேஸத்யபிதநதேநஸம: கொடுத்தாலும் குறையாத பெருஞ்செல்வமுடையவர் என்னவுமாம். த்யாகமிருக்குமிடத்தில் ஸத்யமிருக்கச் சொல்லவேண்டாவிறே: —ஸத்யே தர்மஇவாபர: ஸத்யவசநத்தில் தனக்குமேலான வஸ்துவில்லாமலிருக்கும் தர்மதேவதை யோடொப்பர். அன்றிக்கே ஶ்ருதிஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா என்கிற தன்னுடைய ஆஜ்ஞா ரூபமான தர்மமே யதார்த்தோக்தியில் தமக்குபமானமாயிருக்கை. அங்ஙனன்றிக்கே, தர்ம ஶப்தத்தாலே தபஸ்ஸைச் சொல்லி அத்தால் "வேத ஸ்தத்வம்தபோப்ரஹ்ம" என்று வேதத்தைச் சொல்லுகிறதாகவுமாம். "வேதொகிலோ தர்ம மூலம்" என்று தர்ம மூலமான வேதத்தைத் தர்மமென்று சொல்லிற்றுகவுமாம்.

13. 𑌸 𑌸𑌤𑍍𑌯𑌵𑌚𑌨𑌾𑌦𑍍𑌰𑌾𑌜𑌾 𑌧𑌰𑍍𑌮𑌪𑌾𑌶𑍇𑌨 𑌸𑌂𑌯𑌤𑌃 ।
𑌵𑌿𑌵𑌾𑌸𑌯𑌾𑌮𑌾𑌸 𑌸𑍁𑌤𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌦𑌶𑌰𑌥𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑍍 ॥

13. ஸ ஸத்யவசநாத் ராஜா தர்மபாஶேந ஸம்யுத:
விவாஸயாமாஸ ஸுதம் ராமம் தஶரத: ப்ரியம் ||

ராஜா (ப்ரக்ருதி ரஞ்சகனு யிருக்குமவன்) ஸ: மந்த்ரி முதலானவர்களோடு ஆலோசித்து ராம பட்டாபிஷேகத்தைச் செய்ய ப்ரதிஜ்ஞை பண்ணின தஶரத: (சக்ரவர்த்தி) தர்ம பாஶேநஸம்யுத: தர்மமாகிற பாஶத்தால் கட்டுண்டவராய் ஸத்யவசநாத் கைகேயிவிஷயத்தில் சொன்ன வார்த்தையை நிறைவேற்றுகைக்காக ப்ரியம் ச்ரேஷ்டமான குணங்களை யுடையரா யிருக்கையால் அதிப்ரியராயும், ஸுதம் தன் புத்ரராயு மிருக்கிற ராமம் ராமனை விவாஸய

மாஸ காட்டுக்கனுப்பினான். இதனால் ஸ்த்ரீ விஷயமான வார்த்தை யாகிற க்ஷுத்ர தர்மத்தைக் கைப்பற்றி ஶ்ரேஷ்டமான குணங்களை யுடையவராகையால் தனக்கத்யர்த்த ப்ரியராய் "யௌவராஜ்யேந ஸம் யோக்தும் ஐச்சத் ப்ரீத்யா" என்கிறபடி முன்னமேயே அங்கீகரிக்கப் பட்ட ராமோ விக்ரஹவாந் தர்ம: என்று ஸாக்ஷாத்தர்மமென்னலாம் படியான பரம தர்மத்தைக் கைவிட்டா னென்றபடி. அன்றிக்கே தஶரத: ஸ: ராஜா பத்துத் திக்குகளிலும் தடையில்லாத ரதத்தின் கதியை யுடையவனாகையால் தேவாஸுர யுத்தத்தில் சென்று போர் புரியும்போது கைகேயிபொருட்டுக் கொடுத்த வரத்தை யுடைய அந்த அரச னென்றபடி. தர்ம பாஶேந ஸம்யுத: ஸாங்கேத்யம் பாரி ஹாஸ்யம் என்கிறபடி ஏதோ ஒரு வகையால் பகவந் நாமத்தைச் சொன்னவர்களுக்கும் மோக்ஷம் ஸித்தியா நிற்க எப்போதும் ராமனைப் பாராயணம் பண்ணிக்கொண்டிருக்கும் சக்ரவர்த்திக்கு மோக்ஷ மில்லாமற்போனது ஆபாஸமான தர்மமாகிற பாசத்தால் பத்தனாகையாலன்றோ! என்று வருந்துகிறான். பரம தர்மத்தைக் காற் கடைக்கொண்டு ஸாமாந்ய தர்மத்தைக் கைப்பற்றுவதே ஐயோ! ஸத்ய வசநத்தைப் பரிபாலிக்கும்போதும் முதலிலே பரம தர்மத் தைக் குறித்துப் பண்ணின யௌராஜ்யாபிஷேக ப்ரதிஜ்ஞையை யன்றோ! பரிபாலிக்க வேண்டும். அத்தைவிட்டு அப்பால் ஏற்பட்ட ஸ்த்ரீ விஷயமான ஸத்யத்தைப் பரிபாலித்து பத்தனாவதே! என்று இன்னாதாகிறார் ருஷி.

14. 𑌸 𑌜𑌗𑌾𑌮 𑌵𑌨𑌂 𑌵𑍀𑌰𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌮𑌨𑍁𑌪𑌾𑌲𑌯𑌨𑍍
𑌪𑌿𑌤𑍁𑌰𑍍𑌵𑌚𑌨𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑌾𑌤𑍍 𑌕𑍈𑌕𑍇𑌯𑍍𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑌾𑌰𑌣𑌾𑌤𑍍

14. ஸ ஜகாம வநம் வீர: ப்ரதிஜ்ஞாமநுபாலயந்
பிதுர்வசந நிர்த்தேஶாத் கைகேய்யா: ப்ரியகாரணாத் ||

பித்ரு வாக்ய பரிபாலநம் அவஶ்யம் செய்ய வேண்டுவ தென் பதை ராமாநுஷ்டாநத்தாலே அறிவிக்கிறார். ஸ ஜகாம என்று.

ஸ: அந்த ராமன் வீரோபி ராஜ்ய பரிபாலந ஸமர்த்தனா யிருந் தாலும் கைகேய்யா: ப்ரியகாரணாத் கைகேயியின் ப்ரீதிக்கு ஹேதுவா யிருக்கிற (ஸ்த்ரீபார வஶ்யத்தாலே சொல்லப்பட்ட) பிதுர்வசந நிர் தேஶாத் பிதாவினுடைய வசன மாகிற ஆஜ்ஞையாலும் ப்ரதிஜ்ஞாம் கைகேயின் முன்பாக "தத்ப்ரூஹி வசநம் தேவி ராஜ்ஞோய தபி காங் க்ஷிதம்—கரிஷ்யே ப்ரதி ஜாநேச ராமோத்விர் நாபி பாஷதே"



(எந்தக் காரியம் நமது சக்ரவர்த்திக் கிஷ்டமோ அது விஷயமான வார்த்தையைச் சொல்லிக்காணாய் அந்தக்காரியத்தைச் செய்வேன். ப்ரதிஜ்ஞையையும் பண்ணுகிறேன். ராமன் ப்ரதிஜ்ஞையை விட்டு இரண்டாவது வார்த்தை சொல்லமாட்டான்)" என்று தன்னால் பண் ணப்பட்ட ப்ரதிஜ்ஞையையும் அநுபாலயந் பரிபாலியா நின்றுகொண்டு வநம் தண்டகாரண்யத்தைக் குறித்து ஜகாம சென்றார்.

15. 𑌤𑌂 𑌵𑍍𑌰𑌜𑌨𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑍋 𑌭𑍍𑌰𑌾𑌤𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍋𑌽𑌨𑍁𑌜𑌗𑌾𑌮 𑌹
𑌸𑍍𑌨𑍇𑌹𑌾𑌦𑍍𑌵𑌿𑌨𑌯𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌃 𑌸𑍁𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌵𑌰𑍍𑌧𑌨𑌃 ।
16. 𑌭𑍍𑌰𑌾𑌤𑌰𑌂 𑌦𑌯𑌿𑌤𑍋 𑌭𑍍𑌰𑌾𑌤𑍁𑌃 𑌸𑍌𑌭𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑌮𑌨𑍁𑌦𑌰𑍍𑌶𑌯𑌨𑍍 ॥

15. தம் வ்ரஜந்தம் ப்ரியோப்ராதா லக்ஷ்மணோநுஜகாமஹ
ஸ்நேஹாத்விநய ஸம்பந்ந: ஸுமித்ராநந்தவர்த்தந:
16. ப்ராதரம் தயிதோ ப்ராது: ஸௌப்ராத்ரமநுதர்ஶயந் ||

இக்ஷ்வாகு வம்ஶப்ரபவ: என்ற தொடக்கத்தால் ஸமஸ்த கல் யாணகுண பரிபூர்ணத்வத்தைச் சொன்னமையால் பரத்வம் சொல் லப்பட்டது. தமேவம் என்று துடங்கி அபிஷேக ப்ரவ்ருத்தியையும் நிவ்ருத்தியையும் சொன்னமையால் ஸௌலப்யம் சொல்லப்பட்டது. தம்வ்ரஜந்தம் என்பதால் பரத்வ ஸௌலப்யங்களுக் கநுகுணமான ஸமாஶ்ரயணம் சொல்லப்படுகிறது. அன்றிக்கே ஸித்த ஸாதந நிஷ் டர்களான கைங்கர்ய பரர்கள் இளைய பெருமாளைப்போலே யிருத் தல்வேண்டு மென்பது ஸூசிப்பிக்கப்படுகிற தென்னவுமாம்.

ப்ரிய: உடன் செல்லுவதற்கு அநுகுணமான ப்ரீதியுடையவ னும் "ப்ராதா ஸ்வாமூர்த்திராத்மந:" என்று பெருமாளுக்கு சரீர பூதனான தம்பியும் விநயஸம்பந்ந: (கைங்கர்யத்திற் கனுகூலமான) விநயத்தோடு கூடியவனும். விநய: ஶேஷத்வஜ்ஞானம். அன்றிக்கே ராமகைங்கர்யரூப ஆசாரமென்னவுமாம். ஸுமித்ராநந்தவர்த்தந: "ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய" என்றும் "ராமம்தஶரதம் வித்தி மாம் வித்தி ஜநகாத்மஜாம்" (ராமனைச் சக்ரவர்த்தியாகவும் ஜநக்குல ஸுந்தரியான ஸீதையை நானாகவும் அறி) என்று சொல்லி யனுப்பும் படியான ஸுமித்ராதேவியாருக்கு ஆநந்தத்தை வ்ருத்தி பண்ணுமவ னும் ப்ராது: தயித: "யமேவைஷவ்ருணுதே தேந லப்ய:" (யாவ னொருவனை இவன் வரிக்கின்றானோ அவனாலேயே அடையத்தகுந்த வன்) என்று சொல்லுகிறபடியே ராமனுக்கு அத்யந்த மிஷ்டனுமான லக்ஷ்மண: கைங்கர்யலக்ஷ்மி ஸம்பன்னனாவான் என்றறிந்து வஸிஷ்ட

னால் லக்ஷமணன் என்று சாற்றப்பட்ட திருநாமத்தையுடைய இளைய பெருமாள். "அந்தரிக்ஷகத:, ஸ்ரீமான்" "ஸது நாகவர: ஸ்ரீமான்" என்று ஸ்ரீ விபீஷணாழ்வானுக்கும், ஸ்ரீகஜேந்த்ர ஆழ்வானுக்கும் ஸ்ரீமான்என்று விசேஷண மிட்டுச் சொல்லவேண்டும்படியான குறை யுண்டானாற் போலல்லாமல் திருநாமமே லக்ஷமண: என்று அமையப் பெற்ற ஏற்றமுண்டிறே இளையபெருமாளுக்கு. ஸௌப்ராத்ரம் அநுதர் ஶயந் "நசாஹமபிராகவ" என்று பெருமாளைவிட்டுத் தன் செல்லாமை யாகிற ஸௌப்ராத்ருத்வத்தையும், "நச தேந விநா நித்ராம்" என்கிற பெருமாளுடைய ஸௌப்ராதருத்வத்தையும் அன்றிக்கே உடன்பிறந்தவர்களிவ்வாறு இருக்கவேண்டுமென்பதைக் காண்பிவியா நின்று கொண்டு, வரஜந்தம் தனியிடத்தில் "சென்றால் குடையாம்" என்று தனக்கிஷ்டமான ஸகலவித கைங்கர்யங்களையும் கொடுக்க, செல்லா நின்றவரும், இதனால் கைங்கர்யத்திற்கு அவகாசம் கொடுத்தபடி சொல்லிற்று. ப்ராதரம் தம் "ப்ராதா ப்ர்த்தா ச பந்துஶ்ச" என்கிறபடி ஸகலவித பந்துவும், "மாதா பிதா ப்ராதா நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத் கதி: நாராயண." என்கிற நிருபாதிக பந்துவுமான பெருமாளை ஸ்நேஹாத் "பால்யாத் ப்ரப்ருதி ஸுஸ்நிக்த:" என்றும் "ஆராவன்பிளையவன்" என்றும் சொல்லுகிற ராமபக்தியால் அநுஜகாம "யேநயேந தாதா கச்சதி தேந தேந ஸஹகச்சதி" என்கிறபடி பின் சென்றார். இவ்வாறு காடேறச் செல்கிற தமயனாரைப் பரிவுடன் பின் தொடர்ந்து செல்லும்படியான ஒரு தம்பி யுண்டாவதே என்று ஹ்ருஷ்டனாகிறான் ரிஷி ஹ என்று.

ப்ரியோ ப்ராதா தயிதோ ப்ராது: என்றும் ப்ராதரம் என்றும் இப்படி பௌந: புந்யேந (திரும்பத்திரும்ப)ச் சொல்லவேண்டும்படியிறே யிருப்பது இவர்களுடைய பரஸ்பர ஸௌப்ராத்ருத்வம்.

ராமஸ்ய தயிதா பார்யா நித்யம் ப்ராண ஸமாஹிதா ||
17. ஜநகஸ்ய குலே ஜாதா தேவமாயேவ நிர்மிதா |
ஸர்வலக்ஷண ஸம்பந்நா நாரீணாமுத்தமா வதூ: ||
18. ஸீதாப்யநுகதா ராமம் ஶஶிநம் ரோஹிணீ யதா |

ராமஸ்ய தயிதா பார்யா நித்யம் ப்ராண ஸமாஹிதா ||
7. ஜநகஸ்ய குலே ஜாதா தேவ மாயேவ நிர்மிதா |
ஸர்வலக்ஷண ஸம்பந்நா நாரீணாமுத்தமா வதூ: ||
ஸீதா ப்யநுகதா ராமம் ஶஶிநம் ரோஹிணீ யதா |



இவ்விரண்டு ஶ்லோகங்களாலும் ஸாதநதசையில் புருஷகாரமாகவும், பலதசையில் ப்ராப்யை யாகவும், அந்வயிக்கின்றமையால் பிராட்டியினுடைய நித்யயோகம் சொல்லப்படுகிறது.

ராமஸ்ய அழகியரான பெருமாளுக்கும், தயிதா அபிமதவிஷயமாயிருக்குமவளாயும், நித்யம் பார்யா திருமார்பில் எப்போதும் தரிக்கத் தகுந்தவளாயும், ப்ராணஸமா உயிரோடொத்தவளாயும், (இவ்விஶேஷணம் கீழ்சொன்னவிரண்டிற்கும் ஹேது வாகும்) "நஜீவேயம்க்ஷணமபி" என்னும்படி இருக்குமவள் என்னவுமாம். ஹிதா "மித்ரமௌபயிகம் கர்த்தும்" (பெருமாளுடன் தோழைமை கொள்ளுதல் யுக்தம்) என்கையால் சேதனன் விஷயத்தில் ஹிதபரையாயும், 'ஸ்மாரயே த்வாம் நஶிக்ஷயே' (ஜ்ஞாபிக்கிறேனேயல்லாமல் உன்னை ஶிக்ஷிக்கிறேனல்லேன்.) என்கையால் பெருமாள் விஷயத்தில் ஹிதபரையாயுமிருப்பவள். ஜநகஸ்யகுலேஜாதா (ஆசாரப்ரதாநரான) ஜநககுலத்தில் பிறந்தவளும், தேவமாயேவ நிர்மிதா அம்ருதமதநாநந்தரம் அஸுரர்களை மோஹிப்பதற்கு நிர்மிக்கப்பட்ட விஷ்ணுவின் மாயைபோலிருப்பவளும், அன்றிக்கே நிர்மிதா உருவெடுத்த தேவமாயேவ ஸ்திதா விஷ்ணுவின் ஆஶ்சர்ய சக்தி போன்றிருப்பவளும், இத்தால் ஸௌந்தர்யத்தின் எல்லை நிலம் கூறப்பட்டது. அங்ஙனு மன்றிக்கே நிமிர்தா அவதாரமெடுத்த விஷ்ணுவின் லக்ஷ்மியாயும், ஸர்வலக்ஷண ஸம்பந்நா (ஸாமுத்ரிகா ஶாஸ்த்ரத்தில் சொன்ன) ஸர்வ (உத்தம ஸ்த்ரீ) லக்ஷணங்களோடு கூடியவளும், நாரீணாமுத்தமா முன் சொல்லப்பட்ட எல்லாப் படியாலும் எல்லா ஸ்த்ரீகளுக்கும் சிறந்தவள். ஆந்ருஶம்ஸ்யம் முதலான ஆறு குணங்களையுடைய புருஷோத்தமனான பெருமாளுக்கு தயிதாத்வம் முதலான ஆறு குணங்களையுடைய ஸ்த்ரீகளுக்குத்தமியான பிராட்டி அநுரூபை யென்றபடி.

வதூ: சக்ரவர்த்தியின் மணாட்டுப்பெண். அன்றிக்கே புதிதாக மணந்தவள் என்னுமாம். ஸீதா படைச்சாலிற் பிறந்தவள். அயோநிஜத்வத்தை சொல்லாநின்ற இத்தால் பரமபதத்தில் வசிக்கும்போதுள்ள ஸௌந்தர்யத்தின் குறைவின்மை கூறப்பட்டது. அபி சகாரார்த்தத்தைச் சொல்லாநின்ற அபி சப்தத்தால் கீழ் சொல்லப்பட்ட இளைய பெருமாளுடைய அநுகமனம் (பின் செல்லுதல்) தழுவப்படுகிறது. ராமமநுகதா அளவிலா அழகின் மிகுதியாலாகர்ஷிக்கப்பட்ட வகத்தை யுடையவளாய்ப் பின் சென்றாள். ஶஶிநம்

ரோஹிணீயதா களங்கத்தை யுடைய சந்திரனை ரோஹிணீ பின்சென்றாற்போலே பின்சென்றாள். இவ்வுவமையால் அழகுடையவ னென்று பின்சென்றாளல்லள், பின்னை குரூபியா யிருந்தாலும் விட முடியாத பாதிவ்ருத்தியத்திற் கனுகுணமாகப் பின்சென்றா ளென்பது அர்த்தமாகிறது. இவ்வர்த்தத்தை அநஸூயை முன்னிலையில் பேசுங்கால் தானே தெரிவிக்கின்றாள்.

மற்றொரு விஶேஷார்த்தஃ

ராமஸ்ய தயிதா அபிராமரான பெருமாளுக்கும் அபிமத விஷயமா யிருக்குமவள். பார்யா திருமேனியிலே வகிக்கப்படுபவள். நித்யம் ப்ராணஸமா என்றிரண்டுக்கும் த்ருஷ்டாந்தம் "நஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம்" என்னும்படி நிற்குமவள். இப்படி யிருக்கும் பெருமாளுக்கு ப்ரீதி விஷயமாகைக்கு அனேக ஹேதுக்களைச் சொல்லுகிறது மேல். ஹிதா இத்தாலாத்மகுணபூர்த்தி சொல்லிற்றாயிற்று. மேல்பிறப் பிருக்கும்படி சொல்லுகிறது. ஜநகஸ்ய குலேஜாதா ஞாநாதிகனை ஸ்ரீ ஜநகராஜன் திருமகளான வேற்றஞ் சொல்லுகிறது. இத்தாலும் ஆத்ம குணபூர்த்தி சொல்லிற்றாயிற்று. அன்றிக்கே வீரகுல ப்ரஸூதையான வதிசயஞ் சொல்லுகிறதாகவுமாம். இனி வடிவழகிருக்கும்படி சொல்லுகிறது. தேவமாயேவநிர்மிதா தேவநிர்மிதா மாயே வஸ்திதா "மாயயா லோபயத்வா தாந் விஷ்ணுஸ் ஸ்திரீரூபமாஸ்திதஃ" என்கிறபடியே அஸுரமோஹநார்த்தமாக ஸர்வேச்வர நிர்மிதையான மாயாவநிதை போலே இருக்குமவள் என்கையாலே ஸௌந்தர்யத்தினுடைய பராகாஷ்டை என்னதாயிற்று. "குணைரூப குணைச்சாபி ப்ரீதிர் பூயோப்ய வர்த்தத" என்னக் கடவதிறே தயிதா பார்யா "ப்ரியாது ஸீதா ராமஸ்ய தாராஃ பித்ருக்ருதா இதி" என்னு மர்த்தத்தைச் சொல்லுகிறது. இது ஸௌந்தர்ய மிருந்தபடி. இனி ஸௌகுமார்ய லக்ஷண ஸம்பத்து சொல்லுகிறது. ஸர்வலக்ஷண ஸம்பந்நா ஸௌகுமார்ய ஸௌலப்யாதிகளான உத்தம ஸ்திரீ லக்ஷணங்களாலே குறைவற்றபடி சொல்லுகிறது. நாரீணாமுத்தமா, இப்படி களாலே நாரீணாமுத்தமை யென்றறியலாம்படி இருக்குமவள். "ஸர்வஸீமந்திநீப்யஶ்ச ஸீதாம் ஸீமந்திநாம் வராம். அமந்யந்த ஹிதா நார்யோ ராமஸ்ய ஹ்ருதயப்ரியாம்" என்னக் கடவதிறே "ராகவம் சோபயந்த்யேதே ஷட்குணை: புருஷோத்தமம்" என்று புருஷோத்தமரான பெருமாளுக்கு அநுரூபை என்னும்படி நாரீணாமுத்தமையா

199883
FL
2m211,N35 SL
N35.1.2

## நிபந்தனைகள்

1. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸம்ஸ்தாபந சபையின் சார்பாக இப் பத்திரிகை நடைபெறும்.
2. உபயஸம்ப்ரதாயத்திலுமுள்ள ஆசார்யர்களின் திவ்யஸூக்திகளில் பொதிந்துள்ள அருமையான அர்த்த விசேஷங்கள் மிக எளிய நடையில் இதில் வெளிவரும்.
3. எந்த சம்ப்ரதாயத்தைப்பற்றியும் இழிவான வாசகம் எக்காரணத்தை யிட்டும் இதில் ப்ரசுரிக்கப்பட மாட்டாது.
4. ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களும் விரும்பி வாசிக்கக்கூடிய ஸத்விஷயங்களை வித்வான்கள் எழுதியனுப்பினால் அவை இதில் ப்ரசுரிக்கப்படும்.
5. அது பத்ராதிபரின் இஷ்டத்தைப் பொறுத்தது.
6. ஷை சபையில் அங்கத்தினராகச் சேர இஷ்ட முடையவர்கள் ப்ரவேசக் கட்டணமாக ரூ. 1—0—0 தயவு செய்தால் அது சபைக்கு மூலதனமாக ஆகும்.
7. வருஷத்திற்கு 5 ரூ. கொடுக்குமவர்கள் போஷகர்களாவார்கள
8. மாதம் ஒன்றுக்கு (1) ஒரு ரூபாய் கொடுத்துதவு மவர்களை அடியேனோடு இப்பத்திரிகை விஷயமான ஸுகதுக்காநுபவங்களை யுடையவர்கள் ( Sympathizers ) ஆக பாவித்து அவர்களின் பெயரை பத்திரிகையில் குறிப்பிட்டு அவர்கள் செய்த பெரு நல்லுதவிக்கு என் தலையல்லால் கைமாறிலாதவனாகக் கடவேன்.
9. (25) இருபத்தைந்து ரூபா கொடுக்கு மவர்களை ஜீவியச் சந்தாதாராகக் கருதி அவர்களுக்கு மாதந்தோறும் பத்திரிகை பணமன்றியில் அனுப்பிக்கொண் டிருக்கப்படும்.
10. பத்திரிகையின் வருஷசந்தா

| | | | | |
|---|---|---|---|---|
| வெளியூர் | ... | 1 | 12 | 0 |
| உள்ளூர் | ... | 1 | 8 | 0 |
| தனிப்ரதி | ... | 0 | 3 | 0 |

ஷை ரூபாயை அனுப்பி சரியான விலாசத்தைத்தெரிவித்தால் சஞ்சிகை புக்போஸ்டில் அனுப்பப்படும்.

### விளம்பரம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ராப்பர் முழுப்பக்கம் ஒரு தடவைக்கு | | ... | 5 | 0 | 0 |
| ,, அரைப்பக்கம் | ,, | ... | 3 | 0 | 0 |
| ,, கால்பக்கம் | ,, | ... | 2 | 0 | 0 |

—பத்ராதிபர்.

**Registered No. M. 3401**


## விளம்பரம்

1. தங்கம், கெம்பு, வைரம் முதலானவைகளால் செய்யப்பட்ட நகைகளும், வெள்ளிச் சாமான்களும், உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும். மேலும் புதிதாகவும் பார்ப்போர் மனதைக் கவரும்படியானதாயுமிருக்கிற 1-முதல் 100-மாதிரிகளான வளையல்கள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன.

2. அவைகள் செய்வதற்கு ஜதை 1 - க்கு ரூ. 2-0-0 தான் கூலி.

3. சவரம் பொன்னுக்கு உத்தரவாதம்.

4. வேலை நேர்த்தியாயும் குறிப்பிட்ட தினத்தில் செய்து கொடுக்கப்படும்.

100-தினுசு வளையல்களுக்கும் கேட்லாக்கு உண்டு. அதை வாங்கி நெம்பரைக் குறித்து ஆர்டர் கொடுத்தால் அப்படியே செய்துகொடுக்கப்படும்.

**பைசானி கிருஷ்ணய்ய செட்டி அண்டு சன்ஸ்,**

31, வரதா முத்தியப்பன் தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

## ப்ராணஸுத

(சிறந்த டானிக்)

நண்பர்களே! பல ஹீனத்தினால் ஏன் கவலைப்படுகிறீர்கள்? இதோ எங்களுடைய ஸவரனைப் போன்ற டானிக் ராஜா- "பிராணசுத" இருக்கிறது. இது ரத்தக் குறைவினாலும், மூளையைச் செலுத்தி வேலை செய்வதாலும், இன்னும் பலவித காரணங்களாலும் ஏற்பட்ட பல ஹீனத்தைப் போக்கடித்து விடும். ரக்த புஷ்டியைத் தரும். பலத்தையும், தாது விருத்தியையும் புதிதாய் தரும்.

ஒரு புட்டியை உபயோகித்துப் பார்த்தால் ஆச்சரியப்படுவீர்கள். எல்லாரும் உபயோகப்படுத்தலாம். கேட்லாக் இனாம்.

விலை புட்டி 1க்கு 2—8—0

**மலபார் ஆயுர்வேதிக் ஸ்டோர்ஸ்**

107, பிராட்வே, சென்னை


Edited & Published by Vadakarai, Ramanujachariar, 24, Chandrappa Mudali St.
and Printed at the Liberty Press, 7, Sunkurama Chetty St., Madras,